தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 5 | சென்னை | 18-10-58 | சனிக்கிழமை | இதழ் 18

புலித்தேவனா கட்டபொம்மனா?

ஆராய்ச்சி, விருப்பு வெறுப்பற்றதாக அமையவேண்டும் என்ற அடிப்படையில் எழுதப்படுவதே இந்தக் கட்டுரை. இதற்கு வேறு எந்தத் தனிக் காரணமும் இல்லை.

1947-ஆகஸ்டு 15 வந்தது.

இந்தியத் துணைக்கண்டம் விடுதலை பெற்றுவிட்டது என்று சொன்னார்கள்.

விடுதலை பெற்ற பூமியின் அதிகாரத்தில் வீற்றிருந்த சர்வ வல்லமை படைத்த மேலிடத்தார், தாங்கள் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் மகத்தான போராட்டத்தின் அறுவடை அந்த விடுதலை என்றார்கள். அந்தப் பயனைப்பெறுவதற்காகத் தங்கள் கட்சியார் சிந்திய இரத்தத்தை, பட்ட தடியடிகளை, ஏற்றுக்கொண்ட சிறைவாசங்களை அடுக்கடுக்காக எடுத்துக் காட்டினார்கள். தொடக்கத்தில் எந்த முழுவிடுதலைக் கோரிக்கையையும் முன்வைக்காமலேயே திரண்ட காங்கிரஸ் கட்சியை, கருவில் உருவாகும்போதே விடுதலை முழக்கத்தோடு எழுந்ததாக வர்ணித்தார்கள். உலகம் முற்போக்கு நிலைக்கு வந்து கொண்டிருந்தபோது இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட மாற்றமெல்லாம் தங்கள் கட்சியாரின் ஏகபோகத் தியாகத்தில் மட்டுமே பிறந்ததாகக் கற்பனை செய்தார்கள். தங்களைப் புதிய ஜனனமெடுத்த விடுதலை புரிவாசிகளாகப் 'படம் போட்'டுக் காண்பித்தனர்.

சில நாட்கள் கடந்தன.

'நாமெல்லாம் இந்தியர்' என்ற மயக்கம் கொஞ்சம் தெளிந்தது.

'நாமெல்லாமா இந்தியர்?'

'நம்முடையதா இந்தியா?'

'நமக்கு அதிலே எவ்வளவு உரிமை?'

—சிலருக்கு இப்படி ஐயம் எழுந்தது.

அவர்கள் கேட்டார்கள்:

'இந்தியத் துணைக்கண்ட விடுதலைக்கு நாமெல்லாம் போராடினோம்; இல்லையா?'

'ஆமாம். நாம் போராடினோம்!'

—மேலிடத்திலிருந்து பதில் வந்தது.

'நிச்சயமாக நாம் தானே?'

கேள்வி நாமை அழுத்தியது.

'ஆமாம், நாம் தான்!'

பதில் சாதாரணமாகவே வந்தது.

ஐயப்பட்ட பகுதி திரும்பவும் கேட்டது:

'நாம் போராடினோமே விடுதலைக்கு, பலனை நாம் அனுபவிக்கிறோமா?'

'கண்டிப்பாக அனுபவிக்கிறோம்!'

வழக்கமான இடத்திலிருந்து வழக்கமான பாணியில் பதில் வந்தது.

'அனுபவிக்கிறோமா? முதலில் இதைச் சொல்லுங்கள். அப்படியானால், 1942-ஆகஸ்டு கிளர்ச்சியில் ஈடுபட்ட எங்களூர்க்காரன் பெயரைக் காணவில்லையே விடுதலைவீரர்களின் பட்டியலில்? அதற்கு முன்னால் நடைபெற்ற போராட்டங்களில் ஈடுபட்டவர்களான எங்களவர்களின் பெயர்கள் ஏன் வரவில்லை? கள்ளுக்கடை மறியலிலே கலந்து கொண்டோர், சட்டமறுப்பு இயக்கத்தில் சம்பந்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலம் நாடி வேலை செய்தோர் இவர்களில் எங்களவரின் பெயர்கள் ஏன் வெளியிடப்படவில்லை?'

கேள்விக்கு இப்போது பதில் இல்லை.

ஆனால் புதிய குரல் ஒன்று கேட்டது ஆட்சியின் தலைமையிலிருந்து:

'நாங்கள் சரித்திர ஆராய்ச்சி செய்தோம். காங்கிரஸ் கட்சி தோன்றுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே இங்கே விடுதலைப் போராட்டம் நடந்திருக்கிறது. 1857-ம் ஆண்டு ஒரு மாபெரும் புரட்சி நடந்தது. அதனை நடத்தியதன்மூலம் வரலாற்றில் தங்கள் பெயர்களைப் பொன்னெழுத்துக்களில் பொறித்துக் கொண்டார்கள் எங்கள் முன்னோர்கள். ஜான்ஸி ராணி என்ற வீராங்கனையின் தலைமையில் அந்தப் போராட்டம் நடைபெற்றது. அதுதான் இன்று நாம் பெற்றிருக்கும் சுதந்திரத்துக்கான அடிப்படைப் போராட்டம். அந்தப் போராட்டத்தில் பிறந்ததுதான் இந்த விடுதலை. இன்றைய விடுதலைக்கு வித்தூன்றிவிட்ட அந்தத் தியாகத் திருஉருவங்கள் வணங்கத் தக்கவர்கள். அந்தப் போராட்ட வீரர்களை நாடு மறக்கவேண்டும் என்...காகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளான சரித்திரக்காரர்கள் அவர்களின் பெயர்களை மறைத்துவிட்டார்கள்; நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை எழுத மறுத்துவிட்டார்கள். என்றாலும், முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதி போல எங்கள் ஆராய்ச்சியில் அது தெளிவாகிவிட்டது. ஜான்ஸிராணியே முதன் முதலாக வெள்ளையருக்கு எதிராக முரசொலித்த நம் நாட்டவர்!'

மேலிடத்தின் இந்த முடிவு வழக்கம்போல் முதலில் வரவேற்கப்பட்டது.

மறுப்பவர்கள் யாருமில்லை.

பதிலாக, புதிய பாராட்டுக் குரல்கள்கூட எழுந்தன.

'ஜான்ஸி ராணியே எங்கள் தலைவி!'

'வெள்ளையரை எதிர்த்த முதல் வீராங்கனை ஜான்ஸி ராணி!'

'சரித்திரப் புரட்டர்கள் ஒழிக!'

'இந்திய விடுதலைப் போர் காங்கிரஸ் பிறந்தபோது பிறக்கவில்லை. தொடர்ந்து தேதி குறிக்கப்பட்ட எந்தப் போர்நாளிலும் உதயமாகவில்லை. கடைசியாகச் சொல்லப்படும் 1942-லும் ஆரம்பமாகவில்லை. அது தொடங்கி கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு ஆகப்போகிறது. 1857-ல் நடைபெற்றதே முதல் விடுதலைப் போராட்டம்! அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோரே சுதந்திரத் தந்தையர்!'

கொஞ்ச காலம் மேடை ஏறியோர் நாவெல்லாம், ஏடு எழுதியோர் எழுத்தெல்லாம் ஜான்ஸி ராணியின் திருப்பெயர் நடமாடியது. நாடு முழுதும், பிறந்திடும் குழந்தைக்கெல்லாம் பெயரிட நினைத்தபோது ஜான்ஸியே முன் வந்து நின்றாள். சுதந்திரப் போர்

★ **ப.புகழேந்தி** ★

நாடகத்தின் நிகரில்லாத 'குணசித்திர நடிகை'யாக ஜான்ஸி ராணிக்குப் பட்டயம் அளிக்கப்பட்டது.

வெகு சீக்கிரத்தில் கொஞ்சம் சலசலப்புக் கேட்டது.

'சரி, இருக்கட்டும். ஜான்ஸி பற்றிப் பேசும்போது, ஏன் 'இங்கே' என்றும், 'எங்கள்' என்றும், குறிப்பிட்டீர்கள்?'

பதில் இல்லை.

'அப்படியானால் 'நாம்' அல்ல, 'நாங்கள்', 'நீங்கள்' - அப்படித் தானே?'

— 10-ம் பக்கம் —

கேரளத்தில் கம்யூனிஸ்டுகள்



உலகத்தின் அமைதிக்குப் பங்கம் தருவிக்கும் வகையில் லெபனான் விவகாரம் பெரும்போரின் துவக்கத்தில் சென்று முடியும் என்று நல்லோர் இதயம் துடித்துக்கொண்டிருந்த வேளையில்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியிலே சிக்கியிருக்கும் கேரளத்தில் இந்திய உபகண்டத்து மக்கள் அதிர்ச்சியுறும் வகையில் பல செய்திகள் வெளி வந்தன. கம்யூனிஸ்ட் கட்சி திருவனந்தபுரத்தில் மந்திரி சபை அமைத்த நாளிலிருந்து அதனுடைய எல்லா நடவடிக்கைகளையும் குறை சொல்லிக்கொண்டிருந்த காங்கிரஸ்காரர்களுக்கும், பிரஜா சோசலிஸ்டுகள், புரட்சி சோசலிஸ்டுகள், கத்தோலிக்கப் பாதிரியார்கள், ஆகியோருக்கும் சில அனுபவப் பூர்வமான ஆதாரங்களை கம்யூனிஸ்டுகள் தங்கள் செயல் மூலம் தயாரித்துக் கொடுத்தனர். கேரள சர்க்காரின் கல்வி மசோதா, நிலச் சீர்திருத்த மசோதா, சட்டமும் போலீசும், கம்யூனிஸ்டுகளுக்குத் தரப்பட்ட பல சலுகைகள் – வழக்கு வாபஸ்–உத்தியோக நியமனங்கள்– இப்படிப் பலபிரச்னைகளிலே கம்யூனிஸ்டுக் கட்சியினரும் ஏனைய எதிர்க் கட்சியினரும் கேரளத்தில் தங்கள் பலப் பரிட்சையைப் பரிசோதித்துக்கொள்வதிலே ஒருவருக்கொருவர் குற்றச் சாட்டுக்களைக் கூறிக்கொண்டிருந்தனர். அங்கேரியின் விடுதலை வீரர்கள் என்று உலகத்தின் பெரும் பகுதி மக்களும் அனுதாபங் காட்டிய இம்ரே நாகி மற்றும் அவரது நண்பர்கள் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சியினால், இந்தியக் கம்யூனிஸ்டுகள் பல்வேறு கருத்துக் குழப்பத்திலே இருந்தார்கள். வெளிநாடு சென்றிருந்த அஜய்கோசின் வருகைக்குப்பின் இம்ரேநாகி விசயத்துடன்–கேரள சர்க்கார் பிர்லாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றியும் விவாதிக்குப் போவதாக அறிவிப்புக் கொடுத்தார்கள். ஆனால் மாஸ்கோவிலிருந்து திரும்பியவுடன் அஜய்கோஷ் இம்ரே நாகி விவகாரம் விவாதிக்கத்தக்கதல்ல, அது முடிந்து போன காரியம் என்று தெரிவித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்த மிகப் பெரிய கம்யூனிஸ்டுகள் டாங்கே–கிருஷ்ணய்யர்–கோவிந்த நாயர் போன்றவர்களின் அறிவிப்புக்களைப்பற்றி எவ்வித விளக்கமும் தரப்படவில்லை. கேரளக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் கோவிந்த நாயர் வாயிலாக கேரள சர்க்காரின் பிர்லா ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும் என்று ஆணையிட்ட, கட்சியின் உதவிச் செயலாளர்களின் கட்டளைகள் காற்றிலே பறக்கவிடப்பட்டன என்பதை ஆகஸ்ட் 7-ம்தேதி முதல் 12-ம்தேதிவரை திருவனந்தபுரத்தில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டி தீர்மானங்கள் நமக்குத் தெளிவுறக் காட்டுகின்றன. புதுடில்லியில் சந்திக்க முடிவு செய்திருந்த மத்தியக் கமிட்டியினர்–திடீரென்று ஒரு நாள் திருவனந்தபுரத்தில் கூடி கேரளத்தின் ஆட்சியினைக் காப்பாற்றித் தீர வேண்டிய கட்டாயத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார்கள், இரத்தக் கறை படிந்த சில நிகழ்ச்சிகளால்!

கேரளப் பகுதியிலுள்ள காட்டாம்பள்ளி வட்டாரத்தில் சர்க்காருக்குச் சொந்தமான நிலத்தைக்கைப்பற்றிக் கொண்டவர்களுக்கும் அவர்களை வெளியேற்ற முயன்ற சர்க்கார் அதிகாரிகளுக்கும் எல்லா வகையான மோதுதல்களும் நடைபெற்று முடிந்தபின் ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் இரு படைகளாக நின்று குற்றச் சாட்டுக்களை குவித்தனர். இதே வகையில் சீதாராம் மில் ஆள் குறைப்பும் மாற்றங்களும் முதலமைச்சர் சங்கரனையும் மாஜி முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனனையும் களத்திலே சந்திக்க வைத்தன. இவர்களுக்கிடையிலே சிக்கித் தவித்த தொழிலாளர்களின் வாழ்வுப் பிரச்னையை இரு ரகத்தாரும் இரையாக்கிக் கொண்டனர். சர்க்காரின் சட்டங்கள் பயனற்றவைகளாகி–எதிர்க் கட்சிகளின் ஒருமுகமான எதிர்ப்பினால் பாதிக்கப்பட்டதும் வளர்க்கப்பட்டதுமான கிளர்ச்சிகள் வாரண்டபள்ளியில் பெருங் கலவரமாக முடிந்தன. ஐந்து தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். வேறு பலர் தாக்கப்பட்டு கை முறிந்தும் காலொடிந்தும் தூக்கி யெறியப்பட்டனர் நடை பிணங்களாக! இந்தக் கலவரத்தை ஆதாரமாக வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை சரியான முறையில் எவராலும் தெரிவிக்கப்படவில்லை. கேரளக் காங்கிரசாரும் பிற கட்சியினரும் கம்யூனிஸ்டுகளின் கொள்கைத் திணிப்பைக்கூட அல்ல கட்சியின் ஆதிக்கத்தைத்தான் மீண்டும் மீண்டும் குற்றச் சாட்டுகளாக எடுத்துக் கூறி வருகின்றனர். இந்திய அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு ஆட்சி செய்யப் போவதாக கங்கனம் கட்டி உறுதிமொழிகள் கொடுத்த கம்யூனிஸ்டுகள் தாங்களும் காங்கிரஸ்காரர்களைப் போலவும் பிரஜா சோசலிஸ்டுக் கட்சியினரைப் போலவும் அதிகாரப் பலத்தைத் தங்களுடைய கருவியாகவும் சாதனமாகவும் பயன்படுத்திக் கொள்ளத் தவறினால் தங்களுடைய பீடங்களின் அடித்தளம் நெடு நாள் நிலைக்காதென்பதை உணர்ந்து கொண்டார்கள். எனவேதான் சிற்சில இடங்களில் தங்களின் சுய உருவத்தை–அரசியல் சட்டத்திற்கு அப்பாற்பட்ட, அனுமதிக்கக்கூடாத செயல் முறைகளை வெளிக் காட்டியுள்ளனர். கேரளத்திலே தொடர்ந்து வீசுகின்ற அரசியல் புயலுக்கு அதுவே காரணம் என்பதை எவரும் உணரலாம். கேரளத்து முதலமைச்சர் உள்நாட்டுக் கலவரத்திற்கு வித்தூன்றிவிட்டார் என்ற எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டு மிகப் பலப்படும்வகையில் முந்திரித் தோட்டத் தொழிலாளிகள் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சந்தனத் தோப்புச் சம்பவம் சாதாரணமானதொன்றல்ல. அங்கே விழுந்த பிணங்கள் இரண்டா அல்லது மூன்றா என்பதைக்கூட ஒப்புக்கொள்ளாவிட்டாலும் காங்கிரஸ் துப்பாக்கிகள் மட்டுமல்ல கம்யூனிஸ்டுத் துப்பாக்கிகளும் சுட்டுக் கொல்வதிலே சளைத்தவைகளல்ல என்பதைத் தான் நாமெல்லாம் புரிந்துகொள்ள முடிகிறது.

“சந்தனத் தோப்பில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திற்காக மத்திய நிர்வாகக் கமிட்டி ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. நாட்டிலுள்ள தொழிலாளிகளும், இதர ஜனநாயக சக்திகளும் அடைந்துள்ள ஆழ்ந்த துக்கத்திலும் மனவேதனையிலும் அது பங்கு கொள்கிறது. மக்களுக்கு அதனுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, இறந்து போனவர்களுடைய குடும்பங்களுக்குக் கமிட்டி தன் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது. வருங்காலத்தில் இத்தகைய துரதிஷ்டவசமான சம்பவங்கள் ஏற்படாதபடி தடுப்பதற்காக எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்று மத்திய நிர்வாகக் கமிட்டி மக்களுக்கு உறுதி கூறுகிறது” இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினர் ஆகஸ்ட் ஏழாம் தேதியிலிருந்து பனிரெண்டாம் தேதி முடிய கேரளப் பிரச்னையை விவாதித்து இப்படித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். கமிட்டியின் வார்த்தைகள் சந்தனத் தோப்புச் சம்பவத்தை– அங்கே எந்தவிதமான அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டதென்ற உண்மையை உணர்ந்து எழுதப் பட்டதாகவே அமைந்துள்ளன. தொழிற்சாலையை விட்டு வெளியேறிய லாரியை மறியல் செய்து தடுத்தார்கள். இதுதான் மூன்று தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதற்கு மிக முக்கியமான காரணம். இதனைக் கம்யூனிஸ்டுகளும் மறுக்கவில்லை. காங்கிரஸ்காரர்களும், சோசலிஸ்டுகளும் மறுக்கவில்லை. ஒப்புக்கொள்கிறார்கள்! ஆனால் சுட வேண்டிய அவசியத்தை–கண்ணீர் புகையைக்கூட உபயோகித்து எச்சரிக்கை செய்து கூட்டத்தைக் கலைக்க முயற்சிக்காமல் வலியச் சென்று சுட்டார்கள் என்று எதிர்க் கட்சியினரும்– அவர்கள் அத்தகைய சூழ்நிலையை உண்டாக்கிவிட்டதாகக் கம்யூனிஸ்டுகளும் திருப்பத் திரும்ப ஒரே விளக்கத்தைக் கூறுகிறார்கள். கட்சியின் மத்தியக் கமிட்டி தன்னுள்ளே எழுந்து ஓய்ந்திருக்கும் பலவகையான கருத்தோட்டங்களையும் உறுப்பினர்களின் கண்ணோட்டங்களையும் கணக்கிடுகளையும் மூடி மறைத்து வைத்துவிட்டு கொல்லப்பட்டவர்களை இறந்து போனவர்களாக்கித் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்ததுடன்– கேரள சர்க்காரின் துப்பாக்கி வேட்டையைக் கண்டிக்காமல் நீதி விசாரணைக்குச் செய்துள்ள ஏற்பாடுகளைப் பெரிதும் போற்றத்தக்க வகையில் பாராட்டியிருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினர் கேரள விவகாரத்தில் தங்களுடைய சிந்தனைசக்தியையும் வெளிப்படையாக குற்றங்களைக் கணக்கிடும் சரியானபோக்கையும் மறந்துவிட்டுக் கேரள கம்யூனிஸ்ட் சர்க்காரைக் கண்டிக்கும் திறனற்ற தன்மையில் முடிவெடுத்திருக்கிறார்கள். வேறு சில செய்திகளை இத்துடன் இணைத்துப் பார்த்தால் இந்த உண்மை நிலை நாட்டப்படும். இந்தியத் துணைக்கண்டத்தின் அங்கமான கேரளத்தில்மட்டும் செங்கொடி உயரப் பறப்பது தன்னுடைய புகழில் எப்படியோ ஏற்பட்டுவிட்ட ஒரு களங்கம் என்று கருதியிருக்கிற பாரதத்தின் பெரிய மனிதர் ஜவகர்லால் நேரு– கல்கத்தாவில் பத்திரிகை நிருபர்களைக் கண்டு பேசினார். கேரளத்தில் மத்திய சர்க்கார் தலையிட வேண்டிய அளவு நிலைமைகள் மோசமாகிவிடவில்லை. அங்கே நடைபெறுவனவெல்லாம் இரண்டு கட்சிகளுக்கிடையே நிகழும் சில்லரைக் காரியங்கள், கவனிக்கத்தக்கவையல்ல என்னும் பொருள்பட எடுத்துரைத்தார். கம்யூனிஸ்டுகள் நேருவினிடத்தில் ‘நல்ல பிள்ளைகள்’ என்று அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொள்வதில் எப்போதும் அதிகமான ஆவல்கொண்டவர்கள். நேரு கல்கத்தாவில் பேசிய மறுநாள் இந்தியா வெங்கிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ்காரர்களையும் ஏனைய பொதுமக்களையும் பார்த்து அறைகூவல் விடுத்தார்கள். “கேரளத்தில் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பில்லை என்று பேசுவோரே – ஜவகர் சொல்வதைக் கேளுங்கள். திருந்துங்கள்” என்று எல்லாத் தலைவர்களும் போட்டியிட்டுப் பேசி எழுதினார்கள்! இந்த நேரத்தில் இரண்டொரு நாட்களில் சந்தனத் தோப்பிலே கிளம்பிய துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் நேருவின் காதுகளைத் தாக்கின. இரண்டு நாட்களுக்கு முன்னதாகத் தான் கூறிய கருத்துக்களை மறுத்து–கடுமையான வார்த்தைகளினால் கம்யூனிஸ்டுகளைக் கண்டித்தார். **“கேரள சர்க்கார் சட்ட வரம்பிற்குள் நின்று செயலாற்றுகிறார்கள் என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. மத்திய சர்க்காரின் கேள்வி**

— 11ம் பக்கம் —

அடுத்த இதழில்

தமிழ் வீரம்

எனும் தலைப்பில்

அரங்கேறிய

துறையூர்–ந. அலி

கவிதை வரும்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 18—10—58 ‖ இதழ் 18

பாகிஸ்தான் படிப்பினை

உலக நாடுகளில் இப்போது புதியதொரு நிலை உருவாகியிருக்கிறது. எந்த நாட்டில் நிலையான அரசு ஏற்படுவதற்கு வழி இல்லையோ, அங்கெல்லாம் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது; அல்லது இராணுவத்தில் முக்கியப் பதவியை வகிப்பவர்கள் ஆட்சித்தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

மன்னர் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, நாசர் தலைமையில் உருவான எகிப்திய அரசை இதில் சேர்க்காவிட்டாலும், பிறநாடுகளைச் சேர்க்காமலிருக்க முடியாது.

'மக்களாட்சிக் கருத்துக்களின் பிறப்பிடம்' என்று கருதப்படும் பிரான்ஸ் நாடு, அண்மையில் தனது முழு அதிகாரங்களையும் இராணுவத்தளகர்த்தர் ஜெனரல் டிகாலேயிடம் அளித்து, வாய் மூடிக்கொண்டது.

பிறகு, மிகச் சமீபத்தில் பர்மிய நாட்டின் அரசுரிமையை இராணுவத் திடம் அளித்துவிட்ட பர்மியப் பிரதமர் ஊநூவின் செயலை உலகம் கண்டது.

இப்போது நமது மற்றொரு அண்டைய நாடான பாகிஸ்தானிலும் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் அரசு அமைக்கப்பட்டதிலிருந்து, அங்கு ஏற்பட்டு வரும் கணக்கிடமுடியாத குழப்பங்களை நாம் கண்டு வந்திருக்கிறோம். தொட்டதற்கெல்லாம் தொல்லைகளை வரவழைத்துக்கொண்டு, தங்களைச் சிரமப்படுத்திக் கொண்டு தமக்கு எதிரான அரசியல் கட்சிகளையும் சிரமப்படுத்திக்கொள்வது பாகிஸ்தான் ஆட்சிப் பொறுப்பேற்ற ஒவ்வொரு கட்சிகளின் வேலைத் திட்டமாக இருந்து வந்தது.

ஆண்டு தோறும் புதிய அமைச்சரவைகள்; ஒவ்வொரு அமைச்சரவையிலும் 'திடீர் திடீ'ரென புதிய நியமனங்கள் இவை பாகிஸ்தானில் சர்வ சாதாரணமாக இருந்து வந்தன. அவை காரணமாகவே அங்கு முறையானதொரு அரசியல் திட்டம் உருவாவதற்கும் வழியில்லாமலிருந்து வந்தது.

கடைசியில், இப்போது திடீரென்று அமைச்சர்கள் விலக்கப்பட்டார்கள்; சட்ட சபைகள் கலைக்கப்பட்டன; அரசியல் கட்சிகளுக்குத் தடை விதிக்கப் பட்டது; இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஜனதிபதியாக இருந்த மிர்சா சர்வாதிகாரியாகி, இராணுவத் தலைவர் ஜெனரல் அயூப்கானிடம் இராணுவ ஆட்சியின் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்.

இந்தத் திடீர் மாற்றத்தால், பலவிதத் தகராறுகளுக்கிடையில் பெருமுயற்சி செய்து 1956-ல் உருவாக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் அரசியல் சட்டமும் வீசி எறியப்பட்டுவிட்டது.

நிர்வாகத்தில் புதிய ஏற்பாடுகள் செய்யப்படுகிற வரையில் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியே நடைபெறும்.

அந்த ஆட்சி பற்றி, அரசாங்கத்தின் அடுத்த கட்டளை வரும்வரை அங்குள்ள பத்திரிகைகள் எவையும் கருத்தறிவிக்கக்கூடாது.

இத்தகைய புதிய ஏற்பாடுகளோடு, பாகிஸ்தான் இராணுவ ஆட்சித் திடலில் காலடி எடுத்து வைத்திருக்கிறது.

இந்த உத்தரவுகளைப் பிறப்பித்த மிர்சா, அதற்கான காரணங்களை விளக்கி அறிக்கை விடுத்திருக்கிறார்.

அதிலே அவர், சென்ற பல ஆண்டுகளாக பாகிஸ்தானில் லஞ்சமும் ஊழலும் கட்டுக்கடங்காத அளவு அதிகரித்துவிட்டதாகவும், அரசியல் வாதிகள் தமது அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தி அரசியல் சூதாட்டம் நடத்தி வந்ததாகவும், இதன் காரணமாக அண்மையில் கிழக்குப் பாகிஸ்தான் உதவி சபாநாயகர் படுகொலை செய்யப்பட்டதாகவும், இதனல் மக்களுக்கும் நாட்டுக்கும் பெரும் அவமானம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டு, அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு முடிவு காணவே தாம் இத்தகைய தீர்மானத்துக்கு வரவேண்டியதாயிற்று என்றும் விளக்கியுள்ளார்.

லஞ்சத்தைப் பற்றியும், ஊழலைப் பற்றியும், அரசியல் சூதாடிகளின் சூழ்ச்சிகளைப் பற்றியும் இன்று இவ்வாறு பேசும் மிர்சா, ஏன் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி இதற்கு முன்னதாகவே தனது அமைச்சரவையை வற்புறுத்தவில்லை என்பது நமக்குப் புரியவில்லை.

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படுவதற்கு அரசியல் தலைவர்களின் நடத்தை எந்த அளவு பொறுப்பானதோ, அதே அளவு பொறுப்பானதுதான் மிர்சாவின் சென்ற கால நடத்தையும். பாகிஸ்தானின் இன்றைய நிலைக்கு அரசியல் தலைவர்களைக் குற்றஞ் சொல்லிவிடுவதனாலேயே, இக் குற்றத்தில் அவருக்குள்ள பங்கை அவர் மறைத்துவிடமுடியாது.

ஏற்படுத்தப்பட்டுள்ள இராணுவ ஆட்சிக்குக் கால அளவு குறிக்கப்படவில்லை. மிர்சா எப்பொழுது விரும்புகிறரோ அப்பொழுதுதான் இராணுவ ஆட்சி முற்றுப்பெற்று, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கைகளில் அதிகாரம் அளிக்கப்படும்.

அதற்கான பொதுத் தேர்தலை நடத்துவதற்காவது மிர்சா தயாராக இருக்கிறரா என்றால், அதுதான் இல்லை. இப்போதிருக்கும் நிலையில் பொதுத் தேர்தல் நடைபெற்றால், அதே அரசியல் சூதாடிகள் ஆட்சிக்கு வருவதற்கு வழி செய்யப்பட்டுவிடும் என்கிறார் அவர்.

மொத்தத்தில் மிர்சாவின் இத்தகைய முடிவுகள், அவரது ஜனநாயக விரோதமான கொள்கைகளையே தெளிவுபடுத்துகின்றன.

அப்பழுக்கற்ற ஜனநாயக வாதியாக அவர் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பியிருந்தால், தான் ஆட்சிக்கு வந்த அன்றே அமைச்சரவையையும், சட்ட சபைகளையும் கலைத்துவிட்டு, ஜனநாயக பூர்வமான பொதுத் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். அதன்மூலம், அவர் இன்று பாகிஸ்தானில் எந்த மக்களின் நல்வாழ்வுக்காக புதிய சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர விரும்புகிறரோ, அந்தச் சட்டம் இல்லாமல் அவர்களின் நல்வாழ்வை அமைத்துக்கொள்ள வழி செய்திருக்கமுடியும்.

அதிலே தவறிவிட்ட மிர்சாவின் இந்த விளக்கம், வெறும் சப்பைக்கட்டே தவிர, விஷயம் தெரிந்தவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மையல்ல.

மிர்சாவின் இந்த ஆட்சி, பாகிஸ்தானில் இன்னும் என்னென்ன மாற்றங்களை உருவாக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். நிற்க,

நமது அண்டை நாடான பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமை நம்மையெல்லாம் பலவிதங்களிலும் குழப்புவதாக அமைந்துள்ளது.

இந்தியத் துணைக்கண்டத்து ஆட்சி பீடத்தை அலங்கரிக்கும் கட்சியினரிடத்தும், பாகிஸ்தான் அரசியல் வாதிகளிடம் தங்கியுள்ள அத்தனை 'சத்'குணங்களும் நிறைந்துள்ளன. இலஞ்சம், ஊழல் ஆகியவற்றில் இவர்களும் மற்றவர்களைவிடத் தாம் எந்த விதத்திலும் குறைந்தவர்களில்லை என்பதைப் பலமுறை காட்டியுள்ளனர். அருவருக்கத்தக்க இவர்களின் இந்தச் செயல்கள், நாளடைவில் வளர்ந்து எங்கே இங்கேயும் ஒரு குழப்பமான அரசியல் நிலைமை உருவாகிவிடுமோ என்று நாம் அஞ்சவேண்டியதிருக்கிறது.

அண்டை நாடுகளான பாகிஸ்தானும், பர்மாவும் இராணுவ ஆட்சிப் பிடிப்பிலிருக்கும்போது, இடைப்பட்ட இந்தியத் துணைக்கண்டத்து ஆட்சி எவ்வளவு ஜனநாயக பூர்வமாக நடந்துகொண்டால் இங்கே அமைதி நிலவுவதற்கு வழி ஏற்படும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

அதற்கான ஜனநாயகப் பாதையை நோக்கி நடப்பதில், இந்த நாட்டைப் பொறுத்த மட்டில், எதிர்க்கட்சிகளைவிட ஆளும் கட்சிக்கே அதிகப் பொறுப்பு உண்டு என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ★

மாணவர் மன்ற கட்டிட நிதி

கண்ணதாசன்

ரூ. 501

அளித்தார்.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

பேராசிரியர் மயிலை. சிவமுத்து,
மாணவர் மன்றம்,
17, இரத்தின முதலி தெரு,
சென்னை-1.

கவியரங்கில்...

'ரவி' பற்றி கண்ணதாசன்

அவைப்புலவர் தாலாட்ட
அரசகுலம் சீராட்ட
கவிக்குலத்தின் ஏடுகளால்
காலத்தின் புயல்கடந்து
புவிமுழுதும் புகழ்ந்தேத்தப்
பொருந்திவளர் தமிழ்மொழியை
ரவிக்கவிஞர் தன்கவியால்
நாட்டுவார் இவ்வவையில் !

தமிழ் - மொழி

— 'ரவி' —

இன்னல் ஒழிந்தோட இன்பம் நெளிந்தாடக்
கன்னல் வழிந்தோடத் தென்றல் மொழிபேசச்
சொல்லில் சுவையார்க்கும் நல்ல கவிவார்க்கும்
வல்ல அவைத்தலைவ ! உள்ளூறும் சொற்கவிஞ !
வண்கருத்தின் நல்லூற்றே ! பண்புசால் கண்ணதாச !
எண்ணமெலாம் நற்றமிழாய், ஏற்றமெலாம் செந்தமிழாய்
உள்ளத்தில், தம்முயரில் வெள்ளமென ஊற்றெடுக்கும்
நல்ல கவிதைகளால், சொல்லில் சுவையேற்றி
நாட்டை வளப்படுத்த ஏட்டினிலே தீட்டுகின்ற
பாட்டுக் கவிஞர்காள் ! பண்ணார்ந்த தோழர்காள் !
இந்தக் கவியரங்கில் எம்மைச் செவிமடுக்க
முந்தி விருப்புடனே வந்துற்ற நண்பர்காள் !
பெண்மைச் சிறப்பினில்தான் பேருலகே வாழுமென்ற
வன்மைக் கருத்தினையே வார்க்கின்ற எண்ணத்தால்
இங்குற்ற தாய்மாரே ! என்னருமைத் தந்தையரே !
பொங்குகின்ற அன்பாலே கூறுகின்றேன் நல்வணக்கம்.
உள்ளத் துணர்ச்சியிலே ஊறுகின்ற எண்ணத்தைத்
தெள்ளத் தெளிந்தநம் தேன்மொழியில் வார்க்கின்ற
வன்மை எனக்கில்லை; என்றாலும் உங்கள்முன்
எண்ணம் வடிக்கின்றேன்; எண்ணத்தில் காணும்
பிழையெல்லாம் என்பிழையே ! ஏதும் கருத்து
வழிந்திருந்தால் வண்டமிழின் வன்மையது வாழியவே !

நான்முகம்

உள்ளத்தால் நல்லறிவால் பண்பால் இளமையால்
உள்ளூறும் பேரன்பால் ஒன்றுபட்ட காதலர்கள்
வான்விளக்குப் பொன்னொளியை மண்ணெங்கும்
பூக்கவைக்கும்
தேனிரவில் பேசுவதாய் யாத்துள்ளேன் இக்கவிதை.

தலைவி

பொதிகை மணஞ்சுமந்துப் பூந்தாது வாரிப்
புதுமைக் கவியாக்கப் பொன்னும் கருத்திந்து
அலைதவழ் குற்ற[illegible](து) ஆடி இளமை
வலைவிரிக்கும் வண்ணமிகும் வாலைக் குமரியுளம்
தன்னில் தவழ்ந்து தனித்தமிழை மேவிவரும்
தென்றலைத் தீஞ்சுவையைத் தென்னகத்தின் கன்னலைப்
பாரெங்குந் தேடினும் கிட்டா வொருபொருளைச்
சீரான காவியமாய்ச் செய்யுங்கள் பாடுவேன் நான்...
விண்ணெல்லாம் பொன்னத்தான் வெண்ணிலவின்
தன்னொளியால்
மண்ணெல்லாம் தங்கமன்றோ ? மாறா அழகன்றோ ?
பேசும் உதட்டில் பிழையென்ன அத்தான்
காசுதான் வேண்டுமா கள்தமிழில் பேசுதற்கே ?
அன்பத்தான் உங்களின்நல் அன்பைத்தான் என்னுள்ளம்
எண்ணியெண்ணி ஏங்குவதை ஏனறிய வில்லைநீங்கள் ?
என்னஅத்தான் ? என்னைத்தான் ஏரெடுத்தும் பார்க்காமல்
என்னதான் சிந்தனையோ ? என்னிடம் கூறுங்கள்...

தலைவன்

பாடா இசைமொழியே ! பைந்தமிழின், என்னுயிரின்
வாடாச் சிறப்பினையே வார்த்திருந்த என்னுள்ளம்
உன்னை மறந்ததுகாண்;

தலைவி

என்னை மறந்தீரா ?
இன்பக் கடலென்றும் அன்பின் உலகென்றும்
கண்ணின் விழியென்றும் காவியச் சொல்லென்றும்
பண்ணின் சுவையென்றும் என்னிடம் கூறியசொல்
பொய்ச்சொல்லோ ? ஏமாற்றிப் பூவையரை வஞ்சித்துக்
கைத்தபின்னர் தள்ளும் கயவரோநீர் அத்தானே...

தலைவன்

அன்புக் கவிதையே ! பண்புசால் செந்தமிழை
எண்ணுங்கால்-சுற்றத்தை இன்பத்தை, யிவ்வுலகை
எள்ளளவும் எண்ணார் இசைத்தமிழை யாப்பவர்கள்...

தலைவி

கள்ளமுள்ள உள்ளத்தாற் காய்கின்றீர் என்னை...
செழுந்தமிழ்தான் என்னினும் சிந்தைக்கே இன்பம்
செழிக்கவைக்கும் தன்மைத்தோ; சொல்லுங்கள் அத்தானே !

தலைவன்

சொல்லுகின்ற போதெல்லாம் நல்ல சுவையூறும்;
உள்ளம் கனிகின்ற இன்பம் பெருகிவரும்
எண்ணுகின்ற போதெல்லாம் ! ஏந்திழையே ! அத்தமிழை
உண்ணுகின்ற வேளையெல்லாம் உள்ளமெலாம் பூரிக்கும் !
ஆதிக்கும் ஆதியாய் அண்டத்தின் தொல்பொருளாய்
வேதமெலாம் கூறுகின்ற வேதத் தலைவனுமே
இவ்வுலகில் வாழுமுன்னர் வந்ததடி செந்தமிழ்தான் !
கவ்வும் அறியாமைக் காட்டு மனிதரெனப்
பாரெல்லாம் மக்களெல்லாம் சீரற்ற வேளையிலும்
சாருன வாழ்க்கையிலே சார்ந்த மொழியிதடி !
சங்கத் தமிழ்கண்டோம்; சார்ந்த அலைகடலே
பொங்கிக் குமுறிப் புதைத்தாலும் வாழுதடி...

தலைவி

என்னத்தைச் சொன்னாலும் கன்னற் றமிழ்ச்சிறப்பை
என்னாலே ஏற்க இயலவில்லை... செந்தமிழ்
வேதத் தலைவனுக்கும் ஆதியென்று கூறுவதில்
ஏதும் உயர்வில்லை; உண்மையில்லை; நன்மையில்லை !

தலைவன்

தீட்டாத சித்திரமே ! தேனார் செழுந்தமிழைக்
கூட்டியது யாரென்று எண்ணுகிறாய் ? கூறு...

தலைவி

சிவனார் உடுக்கையில் சேர்ந்தமொழி யென்று
கவிபாடி வைத்துள்ளார்; என்றாலும் என்னுள்ளம்...

தலைவன்

ஏற்காதடி அக்கருத்தை ! ஏனென்றால் கற்பனை
சேர்க்காத காவியந்தான் செந்தமிழில் ஏதடி...?
என்கருத்தைக் கூறுகிறேன்: இந்தச் சிவனாரை
எண்ணி வடித்தவர்கள் இவ்வுலக மக்களடி...
ஆனால், செழுந்தமிழை, செந்தேனை, நம்மொழியை
தேனார் கவிமொழியை வார்த்தது யாரென்றால்
உன்னோடும் என்னோடும் இவ்வுலகைத் தன்னோடும்
மண்ணோடும் விண்ணோடும் சேர்க்கும் இயற்கையடி !
சார்ந்த இயற்கையின் சாகப் படைப்படி
சீரார்ந்த நன்மொழிதான்; வேரறுக்க எத்தனையோ
இன்னலைச் செய்தாலும் என்றும் இளமையால்
கன்னலைத் தன்னுள்ளே காவியமாய் வைத்தடக்கி
வன்மைத் திரைக்கடலும் வன்னெஞ்ச வஞ்சகர்கள்
என்னதான் செய்தாலும் இன்றுமே வாழுதடி !
நச்சுமொழி கொண்டு நம்மைச் சிதைத்தாலும்
மெச்சி உலகெல்லாம் மேலென்று கொண்டாட
இன்றும் செழுந்தமிழ்தான் இன்பத் தனித்தமிழ்தான்
நின்று நிலவுதடி கன்னற் றமிழ்ச்சுவையே !

தலைவி

உங்கள் கருத்தில் ஒருபாதி ஏற்கின்றேன் !
தங்கச் சிலையடித்தும் தங்கும் இடமளித்தும்
அந்தச் சிவனையே ஆக்கும் கடவுளெனும்
விந்தையை ஊட்டியவர் சிந்தையில்லா மக்கள்தாம் !
என்றாலும் அத்தானே இன்பத் தமிழ்மொழிதான்
தொன்மைமிகக் கொண்டாலும் என்றும் இளமையிலே
வாழ்ந்தே வளர்ந்தாலும் வாழ்வை உருவாக்கும்
தாழ்விலா நல்லியற்கை தந்த மொழியென்று
எப்படித்தான் சொல்லுவது ? சொல்லுங்கள் பார்க்கலாம் !

தலைவன்

அப்படிக் கேளடி அன்புக் கவியமிழ்தே !
பேரறிஞன் டார்வின் புதுக்கருத்துக் கொத்தபடி
மாறும் குரங்கினத்தின் வேராக மக்களினம்
சீராய்ப் பிரியுங்கால் சிந்தனை பூத்ததடி !
மாறிவரும் மக்களினம் மன்பதையில் ஒன்ருகக்
கூடிக் கருத்தினைக் கூறச் சொல்லில்லை
ஓடிவரும் எண்ணத்தைக் கையாட்டிக் கேட்ட
ஒலிக்குறிப்பால் மற்ருேர் உணர்ந்திடவே செய்தார் !
ஒலிக்குறிப்பி லன்றி இயற்கைக்கே உற்றசில
சொல்லெடுத்துச் சொல்கிறேன்; கேளாய் கிளிமொழியே !
வல்லகருங் காகமெல்லாம் ஒன்றுகூடிக் கத்தியதை
காட்டு மனிதச் சிறுகுழந்தை கேட்டிருந்தான் !
வேட்டைக்குச் செல்லுங்கால் தன்குழந்தை தின்பதற்கே
சின்னக் கனிகொடுத்தான்; அந்தக் கனிதன்னைத்
தின்னுங்கால் காகமொன்று தட்டிப் பறிந்திடவே
கண்ணீர் வழிந்திடவே சென்ருன்தன் தாயிடமே
கண்ணீர் வடித்திட்ட காரணத்தைச் சைகையினுல்
கேட்டதன் அன்னையிடம் சொல்ல வழியின்றி
கூட்டுக்கா கத்தின் குரல்போல் ஒலிகாட்டக்
'காகா' எனக்கூறத் தாயும் உணர்ந்திட்டாள் !
காகாதான் காகமென ஆனதினுல் நம்மின்
மொழியும் இயற்கையாம் ! அன்பேஇன் னுங்கேள்
குழவியினைப் பாலூட்டும் சிந்தையின்றிச் செற்றுவிட்டாள்
ஓர்தாய் கனியெடுக்க ! நேர்கின்ற வன்பசியால்
வீரிட்டுக் கத்தியது வண்ணக் குழந்தையது !
வாட்டும் பசியாலே வாடி அழுதழுதும்
கேட்கவில்லை தாய்க்கே குழந்தை அழுகையொலி !
மொய்த்த பெரும்பசியால் மென்வயிறு உள்ளிழுக்க
நைந்த உளத்தோடு ஓங்கிக் குரலெழுப்பி
வாய்தன்னை மூடித் திறக்குங்கால் 'ம்மா' ஒலிதான்
பாய்ந்து வெளிவரவே பாய்ந்தோடி வந்தனள்தாய் !
(இ)ம்மா எனவழைத்தால் தன்தாய் வருவாளென்(று)
அம்மாஎன் றேபின்னர் அக்குழந்தை கத்தியது.
நம்முள்ளம் ஒன்றியதால் பூக்கின்ற பொன்மலரும்
அம்மா எனஅழைப்பான் ஆதலினுல் தமிழ்தான்
இயற்கை மொழியென்று கூறுகிறேன் அன்பே !
அயர்வின்றி இன்னுமே ஆராய்ச்சி செய்யுங்கால்
செந்தமிழின் வேர்ச்சொற்கள் சிந்தா இயற்கைவழி
வந்தவை என்றுணர்வாய் இன்பக் கவிக்கன்னி !
இன்னும் புரியாத தேதுமுண்டோ சொல்குயிலி !

தலைவி

எண்ணத்தில் நல்லொளியை ஏற்றினீர் அத்தானே !
எண்ணவொளி கூட்டினீர் என்சிந்தை வொளிபெறவே...

தலைவன்

வெண்ணிலவு வீணுகப் போகுதடி இன்றமிழே !

தலைவி

அன்புள்ள அத்தானே இன்னும் ஒருகேள்வி...

தலைவன்

பாம்புச் சடையழகி ! காம்புத் தாமரைதான்
கூம்பும் எழில்போற் குவியும் இதழரசி...
என்னதான் கேள்வி ? இளங்குயிலே கூவுகநீ !

தலைவி

கன்னலென்றும் தேனென்றும் கள்ளூறும் சொல்லென்றும்
செந்தமிழை ஏற்றுகிறீர்; என்ருலும் இந்நாட்டில்
செந்தமிழைச் சொற்கூட்டிச் சொல்ல இயலாதார்
எத்தனையோ பேரிருந்தும் முத்தமிழைக் கொன்றுவிட
கத்தியைத் திட்டுகிருர்; கன்னற் றமிழ்மொழியைப்
'பாஷை'யெனக் கூறியே பாடையினைக் கட்டுகிருர்.
வேசையாம் இந்தியினை வேகமாய்ச் சேர்ந்திடவே
கூசாது செல்கிருர்; இக்கொடுமை கண்டுநாம்
பேசாமற் கைகட்டி வாழ்ந்திட்டால் என்னவாகும் ?
நாட்டு நடப்பினிலே நான்நாட்டம் கொண்டதனுல்
ஏட்டைப் பிரித்திட்டேன் என்னெஞ்சம் கொப்பளிக்க
வைக்கின்ற செய்திகளே திக்கெல்லாம் காணுதத்தான்;
தைக்கின்ற சொல்லம்பும் சொல்லம்பில் தோய்ந்திருக்கும்
நச்சுக் கருத்துகளும் நந்தமிழ் நன்னிலையை
மெச்சிநாம் வாழ்ந்திட்ட முன்னுள் வளமையையும்
கொன்று குவித்துவிடும்; இன்னும் சிலநாளில்
நன்றுநாம் வாழ்ந்ததெலாம் முன்னைச் சரிதமென
செத்துத்தான் போகுமத்தான்; சிந்தை துடிக்குதத்தான்
முத்துக் குளிப்பதுபோல் முந்தை அறிஞர்தம்
சித்தத்தில் ஊறிச் சாகாத காவியமும்
மொத்தமாய்க் கொன்றிடவே மோதும் எதிர்ப்புகளை
நின்றே எதிர்க்காமல் இன்றே எரிக்காமல்
எண்ணம் குமைந்திருந்தால் ஏற்றமெல்லாம் என்னவாகும் ?

தலைவன்

ஏட்டில் எழுதாத என்னருமைக் காவியமே !
பாட்டுத் தமிழ்மொழியைப் பாயும் கனிமொழியைக்
கொன்றிட்டால் நம்நாட்டில், நம்மினத்தின், நம்வாழ்வின்
இன்பமெலாம் செத்துவிடும் என்றஉண்மை கண்டதனுல்
நம்மொழியைக் கொன்றுவிட நாடுகிருர் வஞ்சகர்கள் !
செம்மொழியைச், செந்தமிழை, நம்முயிரின் பேரூற்றை,
இவ்வுலகில் யாராலும் கொல்ல இயலாது;
அவ்வாறு கொன்றுவிட யாரேனும் எண்ணிவிட்டால்
இங்கேபார் என்கண்ணே ! இன்றமிழைக் காத்திடவே
பங்கேற்று வஞ்சகரின் நெஞ்சம் பிளந்தெடுக்க
வந்த படைவரிசை ! வாழும் தமிழ்வரிசை !
சிந்தாத செந்தமிழை எந்நாளும் காத்திடவே
தாலமுத்து தந்தஉயிர் ஞாலம் அழியுமட்டும்
வாழுமடி ! அன்பரசி ! வாழ்வதோ டல்லாமல்
ஈனம்மிகக் கொண்டோர் வீணைத் தமிழொடுக்கப்
பூனையென வந்தாலும் கொல்புலியாய்ப் பாய்ந்தாலும்
பஞ்சாகப் பிய்த்தெரிக்கும் நெஞ்ச வலிவுதரும் !
அஞ்சா நடராசன் ஆருகச் செந்நீரை
ஊற்றியதைச் செந்தமிழர் உள்ளம் மறந்திடுமோ ?
சேற்றுக்கும் செந்தமிழ்க்கும் வேற்றுமை ஏதென்று
கேட்கும் அறிவில்லார் நீட்டுகின்ற சட்டத்தால்
ஏட்டுத் தமிழ்மொழியை நாட்டின் உயிர்நிலையைக்
கொல்ல முடியுமென்ரு கோதைநீ எண்ணுகின்ருய் ?
வல்ல வடமொழியால், வாழ்ந்திட்ட நம்மொழியைக்
கொல்ல இயலவில்லை தொல்லைமிகத் தந்தாலும் !
சொல்லின் சுவையரசி ! செந்தமிழை வீழ்த்திவிட
வஞ்சகர்கள் எண்ணிடினும் வீழ்த்த முடியாது !
அஞ்சுகின்ற கோழைகள் ஆள்கின்ற நாள்வரையில்
கண்விழித்து வாழோமேல் வண்டமிழின் சீர்குலைக்க
எண்ணிச் செயல்புரிவர்; எண்ணிச் செயல்புரிந்தால்
போரிட் வன்மையில்லா கோழைய ரல்லரடி
சீரான செந்தமிழர்; செந்தமிழ் செத்துவிடப்
பார்த்துமே பல்லிளிக்கும் பஞ்சையல்ல நம்மக்கள் !
சேர்த்துநமைச் சுட்டாலும் ஆர்த்துவரும் நம்குருதி
பைந்தமிழ் வாழ்கவெனப் பண்ணிசைத்தே பாயுமடி !
பைந்தமிழ் வாழ்கவெனப் பண்ணிசைத்தே பாயுமடி !

தலைவி

உண்மையத்தான்; உண்மையத்தான் பெண்மை
நலங்கொழிக்கும்
அன்புத் தமிழ்நாட்டின் மீதாணை கூறுகின்றேன் !
தாய்ப்பால் குடிக்குங்கால் தண்டமிழே ரத்தத்தில்
பாய்ந்தோடல் இன்றுகண்டேன் ! பண்பான அத்தானே !
வீரத்தின் நன்னிலமாம் தீரத்தின் தாயகமாம்
சீரான நம்நாட்டின் நல்லுயிரைச், செந்தமிழைச்
சீரழிக்க யார்வரினும் சீறிடுவேன் பாம்பாக !
பாரே எதிர்த்திடினும் பாரெலாம்தூள் ! தூளேதான் !

தலைவன்

இந்த உணர்வையே எந்நாட்டார் பெற்றுவிட்டார்
செந்தமிழ் வாழ்ந்திடச் செந்தமிழர் வாழ்ந்திடுவார் !
வெண்ணிலவும் தென்றலும் எண்ணத்தில் ஒன்றியதால்
கண்ணேநாம் செல்வோம் இனி.

★

வெண்பாப் போட்டி-29.

ஈற்றடி :
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

முடிவு தேதி 1-11-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.



7

சிவகெங்கை மீட்சி; மருதிருவர் ஆட்சி

விளாம்படம் விடுதியில் மருது பாண்டியரும் வேலுநாச்சியாரும் சுமார் ஆறு ஆண்டு காலம் வரை தங்கியிருந்தார்கள். இந்த இடைக்காலத்தில் வத்தலக்குண்டுப் பகுதியில் வாழை, கரும்புத்தோட்டங்களை வேங்கைகள் வந்து அழிப்பதாக ஐதர் அலியிடம் முறையீடுகள் வந்து கொண்டிருந்தன. ஐதரும் வேங்கைகளை ஒழிப்பதற்கு, சரியான சில வீரர்களைத் தேடிக்கொண்டிருந்தான். மருதிருவரைப்பற்றி அண்ணுவையன் ஐதரிடம் அதிகம் சொல்லியிருந்தபடியால், அவர்களே வேங்கைகளை அழிப்பதற்குச் சரியான வீரர்கள் என ஐதர் முடிவுகட்டினன். விளாம்படத்துக்கு ஆட்களை அனுப்பி, மருதிருவரை அழைத்துவரச் செய்தான். மருதிருவரும் ராணி வேலுநாச்சியாரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள்.

பார்த்திப னிருவரும் வருதி பெற்று
கச்சை யிறுக்கிச் சல்லடந்
தொட்டுங்
காலில் துரும்புவார்ச் செருப் பணிந்து
அச்சமில் லாமலே ஆயுதங்கள்
அவரவர்க் கிசைந்தபடி தானெடுத்து
உச்சித மாக வெளி யேறி
ஓடியே வத்தல் குண்டடுத்து
கெச்சித மாகவே காடடுத்து
கேள்புலி போலவே வேங்கை கண்டு
ஆளை யடித்துப் பயிரை யழித்து
அகோர மாக வருவது வை
வெளியில் குத்தி வாயைக் கிழித்து
விழுத்தாட்டி வால்நுனி தானறுத்து
கொக்கரித்து மிகுசத்த மிட்டுகுலவை
யிட்டு
கொள்ளை மிருகங்கள்
தமை வதைத்து
அக்கரை யாக மருதி ருவரும்
அரசன் ★ திப்பு சுல்தான் சமூகம்
வாராரென் றரிக்காரன் ஓடி வந்து
மன்ன னிடத்தில் செப்பிடவே
தாராள மாகவே மருதிரு வருக்கும்
தகுந்த வரிசைக ளெடுத்துக்
கொண்டு
நாகலா புரஞ்சதிர் மண்டபத்தில்
இராசனுங் கொலுவாக வீற்றி
ருந்தார்.
ஏக மிருக மெல்லாம் வதைத்து



இருவீரர் வருவதைப் பார்த்திருந்
தோர்.
இப்படிப் பூமியில் மனித ருண்டோ
இவர் தேவ சென்மமென்று
சொல்லுகிறார்
அப்படி யாக இருக்கையிலே
அதிவீர ரிருவரும் வந்து விட்டார்
மன்னர் வருவதைக் கண்டு சுல்தான்

★ ஐதர் அலி, திப்பு சுல்தான் என்று இருவரும், இந்நூலாசிரியரால் குறிக்கப்படுவதால், அவர்கள் இருவரும் திண்டுக்கல்லிலேயே இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

சாயபு மனமகிழ்ந் தெதிர்சென்
றழைத்து
தன்னுடன் கூடக் குரிச்சி போட்டு
சரியிருப் பிடமாக இருக்கச் செய்து
நன்னய மாயா பரணம் வஸ்திரம்
நலமான சோடு சாலு வைகள்
திண்ண முடன் மருதிரு வருக்கும்
திருத்தி யாக வரிசை செய்திருந்து
என்ன வுமக்கினித் தேவை யென்று
திப்பு சுல்தானுஞ் செப்பிடவே
மன்னன் நவாப்பை செயித்திட
வலுத்தபடை பீரங்கி வேணு
மென்றார்.
அப்போ தபுல்தார் சீமைய தார்
ஆகை மானுபீஷ் சயிலரை அழைத்து
இப்போ துருப்புப் பன்னி ராயிரம்
யீராறு பீரங்கி மோர் சாவும்
ஒப்புர வாகவே தயார் செய்து
வுரசு வைத்துப் புறப்படுங்க
ளென்றான்
கெப்புலி மருது சொல்தவ றுமல்
கிரமஞ் செய்தவர் சொல்மீ றுமல்
சென்று நவாப்பு படையைச்
செயித்து
தீரன் மருதிருவர் வருதி பெற்று
மன்றில் அவர்செய் பிரசண்டு பெற்று
வருவீர் களொரு வார மதில்
ஆனை பரிகொடி குடை விருது
அடங்கலுடன் கொடுத்து அனுப்ப
லுற்றார்
பாளையம் ஒருமிக்க வாராத தினல்
படிச்செலவுக்கு லட்சம் பொன்
கொடுத்து
தாழை மலர்சூடு ராணி மகராசிக்குத்
தங்க நகைச் சரிகைப் பட்டுடனே
வேண்டிய சாமா னெல்லாங்
கொடுத்து
வெகுதூரம் வந்து வழியனுப்ப
பாண்டிய னிருவருந் திரும்பி
பாச்சாவுக்கு
நமாங்க சலாங் கொ டுத்து
ஆண்டவன் கிருபையால்
சீமையைப் பிடித்து
அனுப்புகிறேன் காயித மென்று
சொல்லி
வேகம தாகப் படைகூட்டி
மருதிருவர்
மேட்டுப் பட்டி வந்து சேர்ந்தார்கள்.
மேகம் போல்படை திரண்டுவரும்
விநோதத்தை இராணி மகராசி
கண்டு
மன்னனும் தங்கையும் இறந்தபழி
வாங்குவோ மென்று மனமகிழ்ந்து
கன்னியர் தாதிமா ரெதிரே சென்று
காலை யிருவருக்கும் ஆலாத்தி சுத்தி
தன்னி மையாய் மருதிருவர் வந்து
தாய்ராணி பாதத்தில் நமஸ் கரிக்க
என்றும் பதினறுய் இருப்பீ ரென்று
இராணி இருவருக்குந் திருநீ
றணிந்தாள்
அன்றிரவு பாளைய மங்கிருந்து
ஆதித்த னுதித்த உடனெழுந்து
பாட்டை மார்க்கத்தில் சாலை
வழியாகப்
பாளையம் வருகிற வேக மென்ன
தாட்டிக மாகவே கோச்சடை
கருப்பன்
சாமி முன்பாக இரங்க லுற்றார்.
கோட்டை மதுரையி லத்தயனிருந்த
கொம்பன் மல்லாரி ராயனுந்தான்
மருது இருவர்படை வாரதினல்
மதுரைக்குக் கிழக்கே விடேனென்று
சுறுசுறுப் பாகப் படை கூட்டி
சூரனைப் போல்வந் தெதிர்த்திடவே
பெரிய மருது பரிவிட் டிறங்கி
பிடித்த வளரியை யேவிடவே
மருக் கொழுந்தைக் கிள்ளி
றற்போல்
மல்லாரி ராயர் தலை துள்ளிவிழ
கூட்டி வந்த படைக ளெல்லாம்
காட்டு வழி சென்று ஓடிடவே

தாட்டீக ஞன மருதிருவர் படையைத்
தானைய மிறங்கி நிறுத்தி வைத்து
மீனுட்சி சன்னிதி தன்னில் வந்து
மிகுந்த அபிஷேகம் பூஜை தெரிசனை செய்து
தானுட்சி தன்பாதந் தான் வணங்கியவள்
தாளடி நெஞ்சில் துதித்துக் கொண்டு
பாளையந் தன்னை யெழுப்பிக் கொண்டு
மருதிருவர் பாட்டை மார்க்கம் வருகையிலே
காளை மருதிருவர் படைமீறி வருகிற
கருத்தை ரங்கராயர் தானறிந்து
திருப்பு வனுத்துக்குக் கிழக்கே விட்டாலிச்
செல்வரை செயிக்க முடியாது
துருப்பு மட்டத்தி லேறிப் படையுடன்
சிலையு மானில்வந் தெதிர்த்திடவே
வந்து எதிர்த்ததை இருமரு தறிந்து
வலதுகை வளரி யேவிடவே
பந்து போல சிரசறுந்து
பக்கத்தில் துண்டா யுருண் டிடவே
கூட்டி வந்த படைக ளெல்லாங்
கோவென் றலரி யோடிடவே
தாட்டீக மாக மருதுப் படை
பாட்டை மார்க்க முத்தனேந்தல் வந்திடவே
நாட்டவர்க ளெல்லா மொன்று கூடி
யதேஷ்டமாய் படை வந்து கூடிடவே
காளையார் கோவில் கொடி போட்டு
காரீச ஞயிருந்த நவாபு வெள்ளைக் காரர்கள்
பாளையந் திரட்டி மருது வந்தால்
படையெழும்பி எதிர்த்திட வேணு மென்று
தன்னுடைப் பாளையம் பீரங்கி மோரீசா
தப்பாம லேர்முக மாய்த்திரண்டு
முன்னணி மானு மதுரைத் திடல்வந்து
மூர்க்கமாய் கூடாரம் அடித் திறங்கி
மேற்கு முகமாகப் பீரங்கியைத்
திருப்பி மிகமருந்து குண்டுசேர்த்து
தீர்க்கமுடன் படைவரவு பார்த்துச்
சீறி எதிர்த்தவர் நிற்கையிலே
மன்னன் மருது படைதிரண்டு வைகை
ஆற்றினில் வந்து குதித்திடவே
தன்னை யறிந்து மருதிருவர் தங்கள்
பீரங்கியை வடக்கே விட்டு
தெற்கு முகமாக மோரீ சாவில்
திருப்பிக் குண்டு மருந்து செய்திருந்தார்.
ஆற்றில் குதித்த படையறிந்து
அடுத்து நவாபு பீரங்கிச் சத்தட்டான்
எதிர்த்து எதிர்த்த படையி லாயிரம்
இறந்து மடிந்தது மருதுபடை
அத்தை யறிந்து மருதிருவர் அவர்கள்
பீரங்கியில் தீயை வைத்தார்கள்.
குண்டு பரிந்து படை முறிந்து
கூடாரம் வெந்து தகர்ந்திடவே
கண்டு துரைமார்கள் ஆலோசனை செய்து
கருத்துடன் தப்பிட வேணுமென்று
கூடாரம் பீரங்கி மோரீசா
கோல்படை களைக் கூட்டிக் கொண்டு
காட்டு வழியாய்ப் புறங் காட்டிக்
காளையார் கோவில் வந்து சேர்ந்தார்.
மன்னன் மருதிருவர் மட்டத்தி லேறி
வாளா வளரி எடுத்துக் கொண்டு
நிண்ண படைகளுக் குரசு சொல்லி
நேர்ந்த படையைத் திரட்டிக் கொண்டு
காடுஞ் செடியுங் கடந்து தங்கள்
காளையார் கோவிலில் வந்திறங்கி
நாடும் படைதனில் சென்றெ திர்க்க
நவாபு படைதான் முறிந்து
ஓடும் வகைக்கு வழிதேடி
ஓட்டமு நடையுமாய்ச் சென்றூர்கள்
இந்தப் படியாக மருதுப் படை
ரெக்கை கட்டி யேறிக் கொக்கரிக்க
சிந்தை கலங்கி நவாப்பு படை
சேர்ந்தொரு முகமாய்த் திரண்டு
மூர்த்தி நாயனுர் கோவில் கடந்து
மூர்க்கமாய் பாளையம் ஒன்று சேர்ந்து
பார்த்திபன் தொண்டைப் பதிசேர்ந்து
பதருமல் பாளைய மாயிருந்தார்
கண்டு மருதிருவர் படை பீரங்கிக்
கால் தளர்ந்து போமொன்று சேர்ந்து
லண்டன் மாது ராணி யுடன்கூடி
வந்து சேர்ந்தார் காளையார் கோவிலிலே
எல்லோரு மொன்று கூடி வந்து
யானை மடுவினில் ஸ்நானம் செய்து
வல்லவன் துரை ராசா வுக்கும்
மங்கை ராணியிரு பேர் களுக்கும்
செய்ய வேண்டிய கிரிகை செய்து

சேகரமாய் †மாலை யிடு கட்டி
வையக மெல்லாம் புகழ்ந்திடவே
மருது இருவரும் ராணியுமாய்ப்
பிள்ளைமார் பிரதானி ராணுவம்
பிரபலப் பாளையக் காரர்களும்
சள்ளை எல்லாந் தீர்ந்த தென்று
சாமி சோமனுதர் பொன்னி நல்லவள்
தொல்லை யகற்றிடுஞ் சொக்க லிங்கம்
மீனுட்சி சுந்த ரேசருடன்
காளையார் அம்மன் சொர்ண வல்லி
கர்த்தருக்கு அபிஷேகம் பூஜை செய்து
வேளா வேளை பூஜை நைவேத்தியம்
விருப்பமாய் நடத்தி வரும்படிக்கு
காரியக் காரர் ஸ்தானிகர்
கரணிக்கர் நிருபர்க் குத்தரவு செய்து
வீரிய மாகவே சாமி யம்மனுக்கு
விசேட வஸ்திரம் பட்டுச் சாத்தி
சங்கை யில்லாத படையுடனே
சாமிகள் வருதி பெற்றுக் கொண்டு
மங்கள மாகவே ஆனை குதிரை
வளர்படை பீரங்கி மோர்சாவுடன்
கங்கை குலம்வளர் சிவகங்கை நகர்வந்து
கர்த்தன் ராணிமக ராசியுடன்
ஆனைமேல் அம்பாரி யேத்தி வைத்து
அழகான கோட்டை வீதி சுத்திவந்து
சேனை காவலரை நிறுத்தி ராணி நல்ல
சுபதினத்தில் சேர்ந்தா ளரண்மனையில்
தங்கள் குலத்தரசர் தன்னை யெல்லாம்
தானே வரவழைத்து மருதிருவர்
மங்கள மாகவே ராணி மகராசிக்கு
மகுடாபி ஷேகமும் சூட்டி வைத்து
சின்னத் தளவாய் மருதுக்குச்
சேர்ந்த பிரதானி மோதிரமும்
மன்னன் பெரிய மருதுக்கு தளகர்த்த
வேலை மோதிரம் தான் தரித்தார்
அட்டவணைப் பிள்ளை மார்க ளவரவர்
வேலையைப் பார்க்கச் செய்தார்
திட்டப் படுத்தியே சீமையைச் செங்கோல்
வழுவாம லரசு செய்தார்
கட்டளை தப்பி நடந்தவரை
கால்மாறி கைமாறி வாங்குவிப்பார்
துட்ட சம்மாரம் சிட்ட பரிபாலனம்
துரைத்தனம் தாழ்வுகள் வாராமல்
தேவா லயம் பிரமாலயம் சத்திரம்
சேர்ந்த மடவா லயங்களில்
தாழ்வில் லாமலே பூஜைநை வேத்தியம்
தானம் எக்கியம் நடந்திடவே
இராமனுத புரம்சிவ கெங்கை இளம்
பாஞ்சாலங் குறிச்சி மூன்று பேரும்
ஓர்மன தாக நவாபு சாயபுக்குப் பகுதி
ஒரு காசுங் கொடாம லாண்டிருந்தார்

—என்கிறது சிவகெங்கைச் சரித்திரக் கும்மி'.

சிவகெங்கையை மீட்பதற்கான போரில், இராணிவேலு நாச்சியார் கொண்ட பெரும் பங்கினைத் தமிழகம் மறக்கமுடியாது. 'சரித்திரக்கும்மி' ஆசிரியர், நிகழ்ச்சிகளை வேகமாகச் சொல்லிக்கொண்டு செல்வதால், வேலுநாச்சியின் வீர வரலாற்றைச் சாதாரணமாக விட்டிருக்கலாம். ஆனல், தென்பாண்டி மண்டலத்து மக்கள் செவி வழிப் பாடல்கள் மூலமும், வாய்வழிக் கதைகள் மூலமும் வேலுநாச்சியாரின் பெருமையை இன்றும் பாடிக்கொண்டிருக்கிறூர்கள். குதிரையில் ஏறி வேலுநாச்சியார் ஈட்டி ஏந்திப் போர்புரிந்த கதை தெம்மாங்காக உலா வருகிறது.

சிவகெங்கைக்கு வந்த சில ஆண்டுகளில் வேலுநாச்சியார் இறந்துவிட்டார். மருதுபாண்டியரே நாட்டை ஆள வல்லவர்கள் என்று கருதி, பெரியமருதுவின் கையில் சிவகெங்கையை ஒப்படைத்தார். மருதுபாண்டியரைப்போல் மக்கள் அனைவரையும் அணைத்துக்கொண்டு செல்லக்கூடியவர்கள் அந்த நாளில் யாரும் இல்லை. முத்துவடுகத்தேவரின் உறவினரான சக்கந்தி வெங்கணப் பெரியஉடையார் என்பவரை, சிவகெங்கையின் தலைவராக முடிசூட்டி வைத்துத்தான் மருதுபாண்டியர் சிவகெங்கையை ஆளத் தொடங்கினுர்கள். முத்துவடுகத்தேவரின் மற்ருெரு பங்காளியானவர் படமாத்தூர் ஒய்யத்தேவர். அவரது தம்பி முத்துவிஜய ரகுநாத பெரியஉடையணத் தேவர் என்பவர். ஒய்யத்தேவருக்கு சிவகெங்கையின்மீது ஆசை இல்லை என்ருலும், உடையணத்தேவருக்கு அது அதிகம் இருந்தது. அவரையும் எப்படியாவது அணைத்துக்கொண்டு, சிவகெங்கை அரசை நடத்திச் செல்லவே பெரிய மருதுபாண்டியர் விரும்பினுர். அம்முயற்சி கைகூடாமற் போயிற்று. ஆயினும், உடையணத்தேவரின் பகை உணர்ச்சி சிவகெங்கைச் சீமையைப் பாதிக்காத வகையில் மருதுபாண்டியர் கவனித்து வந்தனர். உடையணத் தேவருக்கும் மருதுபாண்டியருக்கும் இடையே இருந்த இந்தப் பகையை முன் வைத்தும், தேவர் சமூகத்தைச் சேர்ந்த வேலுநாச்சியைப் பெரிய மருது ஏமாற்றிவிட்டான் என்று கட்டி விடப்பட்ட கதையைக் கொண்டும் தேவர்களுக்கும், சேர்வைக்காரர்களுக்குமே பகையைக் கிளப்பப் பலர் முயன்றனர். இப்படிக் கிளப்புவோர் இரு சமூகத்திலும் இருந்தனர். தன் அன்பு உள்ளத்தினுல் கூடுமானவரை இவற்றை முறியடித்தார் பெரிய மருதுபாண்டியர்.

தொடரும்

† சமாதி

குரல் கெட்ட குயிலே! கேள்!

— கண்ணதாசன் —

காவியம் பயின்ற தாலும்
கற்பனை மிகுந்த தாலும்
ஓவிய வண்ணந் தோற்கும்
உயர்கவி யாத்த தாலும்
பாவலன் குயிலே உன்னைப்
பகுத்தறி வாளன் என்றே
பாவியான் நினைத்தேன்! இல்லை
பண்பிலாச் சிறுவன் நீயே!

பள்ளியின் சிறுவர் போலப்
பகுத்தறி வாளர் யாரும்
அள்ளியோர் இழிசொல் வீசி
அறிந்திலன்! குயிலே! வெட்கங்
கொள்கிறேன்! சிச்சி! உன்னைக்
'கொற்றவன்' என்றார் மூடர்!
நள்ளிரா உள்ளம்! தூய்மை
நடுங்கிடும் சிறுமை கொண்டாய்!

புரட்சியின் தலைவன் என்றும்
புதுயுகக் கவிஞன் என்றும்
வரட்சியிற் படுத்த மாந்தர்
வாழ்வுறும் வளத்தன் என்றும்
பிறர்க்குநின் கவிதை காட்டும்
பெருமைகள் விளங்கச் சொன்ன
திறர்க்குநீ செலுத்தும் நன்றி
தீயினாற் படுக்கை போலும்!

எங்குநீ இருந்தா யென்றே
எம்மனோர் அறியா வேளை
இங்குநீ உள்ளாய் என்றும்
இப்புவிக் கொருவன் என்றும்
பங்கிலாப் புகழுக் கான
பாவலன் நீயே என்றும்
பொங்குமோர் சுவையிற் சொன்ன
புகழினைப் பழித்தாய் பாவி!

தலைவரால் ஒதுக்கப் பட்டுத்
தட்டழிந் திருந்தாய் அன்று!
விலையிலா அறிஞர் உன்னை
வியன்புவி முன்னே வைத்தார்
மலையென நிதியைச் சேர்த்தார்
மயிரிழை சிதறு தாக
அலையெனும் மாந்தர் முன்னே
அளித்ததும் அறிவோம் நாங்கள்!

பழகுவோர்க் கினியன்! நல்ல
பண்பினர்க் கறிஞன்! கல்வி
அழகினை மனமாய்க் கொண்ட
அண்ணனைத் திருடன் என்றாய்!
பிழைபுரி குயிலே! நீமுன்
பேசிய படியே சொல்வேன்!
"அழகுற முடிச்ச விழ்த்தாய்!"
ஆம்! அதன் தலைவோன் ஆனாய்!

'பெரியவர்' நின்பாற் கொண்ட
பெருமையை, குயிலே! நன்றாய்
அறிகுவம்! "முறைப்பா டில்லா
அற்பன்நீ" என்றார்! "தஞ்சைத்
தெருவினிற் பாடும் தோழன்
திறம்உனை வெல்லும்" என்றார்!
புரள்கிறாய் அவரைக் கட்டி!
பொறுபொறு! குத்தும், தாடி!

காலையில் மலரும் எண்ணம்
கண்துயின் றெழுங்கா லத்தில்
மூலையில் விழுமோ, இல்லை
மூளைதான் மூன்றா, நான்கோ?
மாலையின் 'மயக்கம்' மீண்டும்
மாலையே தெளியும் போலும்!
வேலையில் லாத தாலே
வீண்பழி சுமத்த வந்தாய்!

எப்பழி யேனும் நாங்கள்
இம்மியும் அசையோம்! ஆனால்
பொய்ப்பழி உரைப்போர் நாவைப்
பொசுக்குவோம்! யாரா னாலும்
எப்பெருங் கவியா னாலும்
இழிபொருள் என்போம்! காறித்
துப்புவோம் குயிலே! கந்தல்
துணியெனப் புரளா தே,நீ!

உன்னிடம் 'பக்தி' கொண்ட
ஒருவனே சொல்கி றான்! கேள்!
தென்னவர் தலைவன் வெற்றித்
திறத்தினன்! நின்னைத் தேடிச்
சொன்னவன்! நிதியைச் சேர்த்துத்
தந்தவன்! தூயன்! வீரன்!
அன்னவன் முதுகிற் கையால்
அடிப்பவன் கயவன்! மூடன்!

இழந்தநின் புகழை மீட்க
இதுவல பாதை! வீழ்ந்தே
அழிந்தநின் பெருமை மீள
அறிவுடன் எழுவாய்! 'நாயின்
இழிந்ததோர்' தமிழர் நாட்டை
எழுப்பிய கவிஞன், தானே
இழிந்தொழிந் தழிதல் நன்றோ?
எண்ணியே செய்க செய்கை!

இருந்தநாள் புகழ்பெ றாத
இன்கவிக் கூட்டம் யாவும்
இறந்தபின் புகழை நாடும்
இத்தமிழ் அகத்தில், நீயே
இருந்தநாள் புகழைப் பெற்றாய்
இருகரங் குவிப்போர் கண்டாய்!
இறந்தபின் பாடை மீதே
எச்சிலைத் திரட்டா தே,நீ!

அண்ணனின் பின்னே செல்லும்
அருந்தமிழ்ப் புலவோர் கூட்டம்
திண்ணமாய் இங்கே ரத்தில்
திரையினும் மிகவே யாகும்!
எண்ணமே பழுதாய்ப் போன
நின்னையும் எனது அண்ணன்
கண்ணியன் மன்னிப் பான்! என்
கவிக்குலம் மன்னிக் காது!

அன்பினாற் சொன்னேன்! உன்னை
அறிந்ததால் சொன்னேன்! இந்த
வம்பினாற் பெருமை சாகும்
வண்டமிழ் இனத்தார் வார்த்தைக்
கம்பினால் உதைப்பர்! நின்னைக்
கவியென மதியார்! பின்னாள்
என்பையும் நாய்கள் தின்னும்
இப்புவி மறந்தே போகும்!

வடநாடும் நாமும்

★

மராட்டியத்திலிருப்பவர் மராட்டியர் என்றும், பஞ்சாபிலிருப்பவர் பஞ்சாபிகள் என்றும், வங்காளத்திலே வாழ்பவர்கள் வங்காளிகள் என்றும், தமிழ்நாட்டிலுள்ளவர் தமிழர் என்றும் பலகாலமாக அழைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்; இன்று நேற்று அல்ல—நாம் இட்டுக்கட்டிச் சொல்லும் கட்டுக்கதையல்ல – இவையெல்லாம் புதிதாக ஏற்பட்ட பெயருமல்ல!

ஜப்பானியர் முகத்தைப் பார்த்தால், தெளிவில்லாதது போல இருக்கும்; சீனர்களின் மூக்கு தட்டையாக இருக்கும். இப்படி ஒவ்வொரு இனத்தாரும் அவரவர் வாழ்கின்ற இடத்துக்கேற்றபடி பரம்பரை பழக்க வழக்க – பண்பாடுகளுக்கேற்ப இன்ன இன்ன இனம் எனப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மனித இனம் ஒன்றானாலும், இடத்துக்கு இடம் வேறுபாடு உண்டு. வடக்கே 'தவசி' என்றால் தெற்கே-தமிழகத்தில் 'துறவி' என்கிறோம். தவசியும் – துறவியும் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், ஒரே அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய சொற்கள்தான்; என்றாலும், தவசிக்கும் – துறவிக்கும் வேறுபாடு உண்டு.

வடக்கே 'ஆசிரமம்' என்றால் தெற்கே 'பாசறை'; அங்கே 'ராஜா' என்றால் இங்கே 'மன்னன்'; அங்கே 'அக்ராசனாதிபதி' என்றால் இங்கே 'தலைவர்' என்கிறோம்.

தவசி என்பவர்களுக்கு உதாரணமாக-விசுவாமித்திரர், வசிஷ்டர், வியாசர் ஆகியோரைக் குறிப்பிடலாம். துறவிக்கு எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரம் தீட்டிய இளங்கோவடிகளைக் குறிப்பிடலாம். தவசிகள் நாட்டைவிட்டு மனித சஞ்சாரமற்ற காடு நோக்கிச் சென்று, அங்கு பர்ணசாலைகளை அமைத்துக்கொண்டு 'தபசு' செய்ததாகக் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டுத் துறவிகள் காட்டுக்குப் போகவில்லை; நாட்டுக்குத் தொண்டு செய்தனர். அக்ராசனாதிபதி என்பவர்கள் இப்படி மேடையமைத்து நின்றுகொண்டு பேசமாட்டார்கள் – உட்கார்ந்துகொண்டு, மக்களுக்குப் புரியாத விஷயங்களை புரியாத மொழியில் சொல்லி விளக்கிக்கொண்டிருப்பார்கள். தலைவர் என்பவர்கள்தான் நம்மைப்போல இப்படிப் பேசுவார்கள்,

இப்படித்தான், ஒவ்வொரு துறையிலும் வடநாட்டுக்கும் – நம் நாட்டுக்கும் பல வித்தியாசங்கள் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்திருக்கின்றன,

—அறிஞர் அண்ணா.

மாமல்லர் ஊட்டிய மருந்து

மாலை 5 மணிக்கெல்லாம் நிலையம் வந்து சேர்ந்துவிடவேண்டும் என்று எங்கள் குழுத்தலைவர் கண்டிப்பாகச் சொல்லியிருந்தார். அதனால் விரைந்து அந்த முயற்சியில் ஈடுபட்டேன். ஆயிற்று இன்னும் சற்றுநேரத்தில் முடிந்துவிடும் என்று எண்ணி மகிழ்ந்தேன். மறுகணம் யாரோ என் கையைப் பிடித்துத் தடுப்பதை உணர்ந்தேன். நேரமாகிவிட்டது என்பதை உணர்த்த குழுவின் தலைவர்தான் வந்துவிட்டாரோ என மருண்டு திரும்பினேன்.

என் எதிரே பட்டாடைகளுடன் 'அரசர்'போல் ஒருவர் நின்றிருந்தார். அவரை எனக்குத் தெரியவில்லை. எங்கோ நாடகத்தில் பார்த்த அரசர் வேடம் நினைவுக்கு வந்தது. 'மேடையில் இருக்கவேண்டிய நடிகர் இங்கு ஏன் வந்தார்?' என்று அறியாமல் திகைத்தேன். 'நீங்கள் யார்' என்று அவரையேதான் கேட்டுவிட்டால் என்ன என்று ஒரு துணிவு பிறந்தது.

"நீங்கள் நீங்கள்..."

"நாங்கள் யார் என்பது இருக்கட்டும். நீ செய்வது என்ன வேலை?" என்றார் அவர்.

"ஒன்றுமில்லையே..."

"என்ன ஒன்றுமில்லை. கையிலே கல் வைத்திருக்கிறாய். உன் பெயரா அது? அதை வேறு செதுக்குகின்றாய்."

"ஆமாம். இது தவறு என்று எண்ணவில்லையே."

"தவறில்லையா?"

"ஆமாம். நாங்கள், நாங்கள் மட்டும் என்ன, எல்லோரும்தான், எங்கு போனாலும் எங்கள் பெயரையும் வந்த நாள் முதலிய விவரங்களையும் இப்படிக் குறித்துவிட்டு வருவது வழக்கம்" என்றேன்.

."ஏன்?" என்றார் அவர்.

"ஏனா, உங்களையே கேட்டுப் பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே அவர் பக்கத்தில் ஒரு முதியவர் வந்து நின்றார்.

அவர் கையில் சின்ன உளி ஒன்றும் சுத்தி ஒன்றும் இருந்தது.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பொறுத்திருந்து அவர்கள் உரையாடலைக் கேட்டேன்.

"என்னையே கேட்டுப் பார்ப்பதா?" என்ன சொல்லுகின்றீர்கள்.

"சிற்பியாரே" என்றார் அவர்.

"மாமல்லா, நான் சொல்லியா உனக்குத் தெரியவேண்டும்? உன் பெயர் உலகில் நிற்கட்டும் என்றுதானே நீ இந்தக் கலைக் கூடத்தைப்படைப்பிக்கின்றாய்?" என்றார் அவர்.

என்முன் மரஞ்செடிகள், மலை, சிற்பம், மாமல்லபுரம் அத்தனையும் சுழன்றது. திகைப்பும் குழப்பமும் மிகுந்தது. மாமல்லரும் அவருடைய தலைமைச் சிற்பியும் என்முன் நின்று உரையாடுகின்றனர்! என்ன சொல்வது? சொன்னால்தான் யார் இதை நம்புவார்கள்?

மேலே என்ன பேசுகின்றார்கள் என்று உற்றுக் கேட்டேன்.

"ஆமாம் சிற்பியாரே. என் பெயர் நிலைக்கத்தான் நான் இத்தனையும் செய்தேன். ஆனால் ஒரு இடத்திலாவது என் பெயரை எழுதிவைத்திருக்கின்றேனா?"

"இல்லை."

"போகட்டும், நானே ஏதேனும் செய்வித்துத்தானே, என் பெயரை நிலைக்கச் செய்கின்றேன். இவர் ஒன்றும் செய்யாமலே, இங்கு வந்துபோனதற்காக மட்டுமே தன் பெயர் நிலைக்க வேண்டும் என்று பாடுபடுகின்றாரே, அதுதான் என்னை வருத்துகின்றது."

"ஏன் பொறாமையாக இருக்கிறதா? நீங்கள் பாடுபட்டுப் பெற்றதை அவர் பாடுபடாமலே பெற முயல்கிறார். அவ்வளவுதானே" என்று சிற்பியார் நகைத்தார்.

"என்ன என்னையே மருட்டுகின்றீர்கள்?"

"பின்னே, என்ன மன்னவா, என் மனம் அந்த அளவுக்கு மரத்துப்போய்விட்டது."

"மரத்துப்போய் விட்டதா, உங்கள் மனமா? கல்லையும் கனிவித்து அதில் காண்போர் கரைந்துருக எழில்நிலை சிற்பம் வடிக்கும் உங்கள் மனமா மரத்துவிட்டது?"

"ஆமாம், மன்னவா, ஆமாம். நான் அப்போது இருந்த நிலையில் இன்று இல்லை. என் மனம் மரத்துத்தான் போய்விட்டது."

"என்ன சிற்பியாரே தங்கள் குறை. கேட்கலாமோ நான்?"

"கேள். நன்றாகக் கேள். நீ விரும்புகின்றாயே என்பதற்காக எதை எதையோ சிற்பமாக்கினேன். அழகிய ஊர் வேண்டும் என்றாய், நல்ல யானை வடிவாகட்டும் என்றாய், ஓடிடும் உன் தேர்போல் ஓடியாத கல்லால் தேர் அமைக்கச் சொன்னாய், கல்லைக் குடைந்து கலையின் உரு அமைக்கச் சொன்னாய்...!"

"ஆமாம்.....அதிலே என்ன தவறு?"

அதிலே ஒன்றும் தவறில்லை மன்னவா, ஆனால் நீ சொன்னதைக் கேட்டு நானும் ஏமாந்தேன் பார் அதுதான் தவறு. நீ சொன்ன வண்ணமெல்லாம் என் கைவண்ணம் காட்டி, கலையின் வண்ணம் புலப்படுத்தினேன். என் மாணாக்கர் பலர் இதிலே வாழ்வு முழுவதும் ஈடுபட்டனர். இன்று அதெல்லாம் என்ன ஆகியிருக்கின்றது?"

"இன்றும் அழியாமல் தானே இருக்கிறது. வருவோர் தொகையும் மிகுந்திருக்கின்றது. இதோ இவரைப் போன்ற சிலர் அங்கங்கு சில மாறுபாடுகள் செய்கின்றனர்." என்று என் கையைப் பிடித்த பிடியை இறுக்கினார். எலும்பு இற்றுவிடுமோ என அஞ்சினேன்.

"அவரை விடு பாவம், அவர் என்ன செய்திடுகின்றார். தன் பெயர் பொறிக்க முயல்கின்றார் அவ்வளவுதானே. மற்றவர்கள் செய்வதைப் பார் மன்னா, நான் கற்பனையில் கண்டு வடிவம் கொடுத்த சித்திரங்களை இன்று ஏதேதோ சொல்லி ஏய்த்திடுகின்றனர் பார். செதுக்கிச் சிற்பமாக்கியதைப் பாரதக் கதையின் காட்சி என்கின்றனர், செதுக்காது விட்ட பெருங்கல்லை வெண்ணெய் என்கின்றனர். மலை உச்சியில் பணிசெய்த என்

மா. கி. தசரதன் எம். ஏ.

மாணவர்கள் நீர் தேக்கி வைத்திட வெட்டிய குழி திரோபதை குளித்த இடம் என்று, கண்டவர்போல், கதை சொல்லுகின்றனர். இதையெல்லாம் பார்க்கும்போது என் மனம் என்ன பாடுபடுகின்றது தெரியுமா?" என்று கையை ஓங்கினார்.

ஓங்கிய அவர் கையில் என்ன இருக்கிறது என்று பார்க்க மெள்ள இமைகளைத் திறந்தேன். ஒருமுறை இமைத்துப் பார்த்தேன். அப்போதும் என் ஐயம் தெளியவில்லை.

சிற்பியின் கையில் கூரிய ஊசி ஒன்று இருந்தது! உற்றுப்பார்த்தேன். சிற்பிக்குப் பதில் அங்கே ஒரு மருத்துவர் நிற்கக் கண்டேன்.

எனக்கு ஏதும் விளங்கவில்லை.

"பரவாயில்லை. கொஞ்சம் ஓய்வாக இருக்கட்டும். பிறகு பார்க்கலாம்" என்றார் அவர்.

மறுநாள்தான் எனக்குச் செய்தி தெரிந்தது. எங்கள் குழுவை விட்டுப் பிரிந்து தனியாக ஒரு இடத்தில் பாறையில் என் பெயரைச்செதுக்கிக்கொண்டிருந்தேன் நான். அப்போது ஒரு கருங்கற்சில் தெறித்து வந்து என் கண் ஓரத்தில் பட்டு நான் மயங்கி வீழ்ந்துவிட்டிருக்கின்றேன்.

இதைக் கேட்ட பின்னர் மாமல்லரும் சிற்பியும் என் மயக்கத்தில் வந்து மருந்து ஊட்டிச் சென்றனர் என்பதைச் சொன்னால் யார் நம்புவார்கள்? ★

திரைப்படத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

10-10-58 அன்று மாலை, திரைப்படக் கதாசிரியர்களும், கவிஞர்களும் திரு. ஏ. பி. நாகராசன் இல்லத்தில் கூடி தங்களுக்கென ஒரு சங்கம் அமைத்துக்கொள்வதென தீர்மானித்திருக்கின்றனர். அதற்கு 'திரைப்படத் தமிழ் எழுத்தாளர் சங்கம்' என்று பெயர் வைப்பது என்றும் முடிவாயிற்று.

இந்தச் சங்கத்தில், திரையுலகில் பணியாற்றும் எல்லாக் கதாசிரியர்களையும், கவிஞர்களையும் உறுப்பினர்களாகச் சேர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, அதற்கானதொரு அமைப்புக்குழுவும் உருவாக்கப் பெற்றது.

திருவாளர்கள் சின்ன அண்ணாமலை, எஸ். டி. சுந்தரம், இராம. அரங்கண்ணல், ஏ. மருதகாசி ஆகியோர் அமைப்புக் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

இந்தக் கூட்டத்தில் கச்சா பிலிம் கட்டுப்பாட்டை ரத்துச் செய்யச் சொல்லி, மத்திய அரசினருக்குத் தந்தி கொடுக்க ஏற்பாடு செய்யப்பெற்றது.

இதன் அடுத்த கூட்டம் 17-10-58 மாலை திரும்பவும் கூடி, சங்கத் தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர் ஆகியவர்களைத் தேர்ந்தெடுப்பதென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

அதற்கும் பதில் இல்லை.

இன்னும் சிறிது நாட்கள் ஓடின.

'1857 - என்று சொல்கிறீர்கள்; அதற்கு முதல் ஆண்டு எங்கள் பகுதியில் ஒரு வீரன் இருந்து வெள்ளையரை எதிர்த்திருக்கிறானே, தெரியுமா ?'

'எங்கள் வட்டாரத்தில் ஒரு மாவீரன். அவனுக்கு வெள்ளையரைக் கட்டோடு பிடிக்காது. அவன்தான் இங்கே முதன் முதலில் அவர்களை எதிர்த்திருக்க வேண்டும். இதற்கு ஆதாரங்கள் ஏராளம் உண்டு. ஆனால் அவை எதிரிகளால் மறைக்கப்பட்டுவிட்டன. மொத்தத்தில் அவனே முதல் விடுதலை வீரன் !'

'பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டது என்று கருதப்படும் ஏட்டுப் பிரதியொன்று கிடைத்திருக்கிறது. அது ஒரு வீரனைப் பற்றிய வரலாறாகும். ஏட்டின் நாயகனான அதன் தலைவன், விடுதலை வேட்கை நிரம்பப் பெற்றவன். அவனால் அன்னிய ஆட்சியைச் சகித்துக்கொண்டிருக்க நிச்சயமாக முடியாது. அவனே முதல் சுதந்திரப் போர் நடத்திய தீரனாக இருந்திருக்க வேண்டும் !'

—இந்தியத் துணைக்கண்டத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இப்படிச் செய்திகள் வந்தன.

ஆட்சிக்கு வந்துவிட்டோர் ஏக இந்தியாவுக்கும் தங்களை அர்ப்பணித்திருப்பதாக எண்ணாமல், தாங்கள் பிறந்த குறிப்பிட்ட ஒரு பகுதிக்கே உரியவர்கள் என எண்ணினார்கள். பிற பகுதிகளையும், பகுதி மக்களையும் அலட்சியப்படுத்தினார்கள்.

அலட்சியப்படுத்தப்பட்ட பிற பகுதியினர், தங்கள் பகுதிகளும் விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ளன என்பதை நிரூபிக்க, பழைய சரித்திரத்தைக் கிளற வேண்டிய கட்டாயத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள். இந்தக் காரியத்தில் அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த வரலாற்று அறிஞர்கள், இலக்கியப் பேராசிரியர்கள், தேசியத் தலைவர்கள் எல்லோரும் ஈடுபட்டார்கள். கல்வெட்டுகளைத் தேடினார்கள். ஏட்டுப் பிரதிகளைத் துருவினார்கள். வழங்கிய பழங் கதைகளை கேட்டு ஆராய்ந்தார்கள்.

கடைசியில், மேலிடத்தாரைத் தவிர மற்ற நல்லவர்கள் எல்லோருமே வெளியிட்ட கருத்துக்களில் விவாதிக்கத் தேவையில்லாத ஒருமனதான கருத்து இதுவாகத்தான் இருந்தது:

'இந்திய விடுதலைப் போரை முதன் முதலில் தொடங்கியது ஜான்ஸி ராணியல்ல !'

பரம்பரை பரம்பரையாகவே விடுதலை வேட்கை நிரம்பப் பெற்ற தென்னகம் விழித்துக் கொண்டது. தங்களவர்களிலும் மாவீரர்கள் பலர் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்திருக்க வேண்டும் என்று அவர்கள் நிச்சயமாக நம்பினார்கள். வெள்ளைக்காரர்களின் காலத்திலேயே தாங்கள் வடநாட்டவரால் அலட்சியப் படுத்தப்பட்ட சோகக் கதையின் ஒவ்வொரு அத்தியாயமும் அவர்களைத் தீவிரப்படுத்தின.

அவர்களுடைய எண்ணத்தில் தவறு இருக்கவில்லை. நியாய பூர்வமான ஆராய்ச்சியின் மூலம் இந்திய விடுதலைப் போரை முதன்முதலில் துவக்கியவர்கள் தென்னாட்டவரே என்று அவர்கள் கண்டார்கள்.

தென்னகமெங்கும் ஒரே குரல் முழங்கியது :

'இந்திய விடுதலைக்கு வித்தூன்றியவர்கள் தென்னாட்டவர்களே !'

விவாதங்கள் நடந்தன. புதிய விரிவுரையாளர்கள் வந்தார்கள். எதைஎதையோ பேசினார்கள். எப்படி எப்படியோ ஆராய்ந்தார்கள். எங்கெங்கோ ஆதாரங்களைத் துருவினார்கள்.

'திருநெல்வேலிச்சீமையிலுள்ள பாஞ்சாலங்குறிச்சி என்ற பாளையத்தின் அதிபதியான வீரபாண்டியக் கட்டபொம்மனே முதன் முதலாக வெள்ளையரை எதிர்த்த வீரன் !'

வெளியிடப்பட்ட இந்தக்கருத்துக்குப் பின்னால், தேசியப் போராட்டத்தில் உண்மையிலேயே தென்னாட்டாரின் பங்கு அதிகம் என்று எண்ணியவர்கள் நின்றார்கள். அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக சரித்திர ஆராய்ச்சியில் காணப்படும் உண்மையைத் தெளிவுபடுத்தத் தொடங்கினார்கள்.

இறுதியில் கட்டபொம்மனே முதல் விடுதலை வீரனாக, தென்னாட்டவர்களால்-குறிப்பாக தமிழகத்தாரால் ஒப்புக்கொள்ளப் பட்டான்.

கட்டபொம்மன் விழாக்கள் நடைபெற்றன.

கட்டபொம்மன் பெயரில் பொது அமைப்புகள் உருவாயின.

கட்டபொம்மனுக்குச் சிலை வைக்கப்பட வேண்டும் என்று பேசப்பட்டது.

சென்னை அரசினரின் ஆட்சிக் கோட்டையேகூட 'கட்டபொம்மன் கோட்டை' என்று பெயர் மாற்றப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

கட்டபொம்மன் பெயரில் நாடகங்கள், திரைப்படங்கள் உருவாயின.

இந்த நிலையில் சமீபத்தில் திடீரென தமிழகத்திலேயே சிலரால் இப்படிப் பேசப்பட்டது:

'கட்டபொம்மன் கொள்கை வீரனல்ல, கொள்ளைக்காரன் !'

'கன்னியரைக் கற்பழித்தான்; களஞ்சியங்களைச் சூறையாடினான்; அன்னை பூமியை அன்னியரிடம் காட்டிக் கொடுத்தான் !'

'கட்டபொம்மன் தமிழனல்ல; தமிழகத்தைச் சுரண்ட வந்த அன்னியன் !'

இந்தக் கருத்துக்களைக் கேட்டோர் விழிகளைத் திறந்தபடி கேட்டார்கள் :

'அப்படியானால் தெற்கில் முதலில் விடுதலை கீதம் முழங்கவில்லை என்று சொல்கிறீர்கள் ?'

'யார் சொன்னது அப்படி ?'

'பின்னே, கட்டபொம்மன் இல்லாமல் எப்படி தமிழகம் அந்த இடத்தைப் பெறமுடியும் ?'

'முடியும் ! கட்டபொம்மனுக்கும் முன்னாலேயே ஒரு மாவீரன் தமிழகத்தில் இருந்திருக்கிறான்; அன்னியரை எதிர்த்திருக்கிறான் !'

'யார் அவன் ?'

'அதே திருநெல்வேலிச் சீமையின் மற்றொரு பாளையக்காரனான நெற்கட்டுஞ்செவல் அதிபதி வீரத்தலைவன் புலித்தேவன் !'

'புலித்தேவனா ?'

'ஆமாம்; புலித்தேவன்தான் ! அவன்தான் அன்னியருக்கு எதிராக முரசு கொட்டிய முதல் வீரன். அப்பழுக்கற்ற தமிழர் தலைவன். அவன், கட்டபொம்மனுக்கும் முன்னரே இருந்தவன்; கட்டபொம்மனின் பாட்டன் காலத்திலே ஆட்சி செய்தவன் !'

தமிழகம் குழம்பித் தவிக்கிறது.

கட்டபொம்மனே முதல் விடுதலை வீரன் என்றவர்களின் கண்கள் ஆத்திரத்தால் சிவக்கின்றன.

'கட்டபொம்மனையா குறை கூற வந்தீர்கள் ? கசடர்கள் !'

அவர்களின் மிரட்டல்களுக்கு எதிராக புலித்தேவனின் 'பக்த கோடி'கள் சீறுகிறார்கள் :

'புலித்தேவனே முதல்வீரன். கட்டபொம்மனை வீரன் என்பதன் மூலம், தமிழகத்தையே காட்டிக்கொடுக்கிறார்கள் இவர்கள் !'

கட்டபொம்மனை ஆதரிப்போரும், புலித்தேவனின் பக்கம் நிற்போரும் அந்த இருவரையும் விட்டு விட்டுத் தங்களைப்பற்றிய சொந்த விவகாரங்களை விமர்சனம் செய்துகொள்கிறார்கள்.

பிரச்னை முடிவுக்கு வரவில்லை.

எங்கும் இதுதான் பேசப்படுகிறது :

'புலித்தேவனா, கட்டபொம்மனா ?'

- அடுத்த இதழில் -

ஆசிரியர் கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

திருவெற்றியூர்

2-10-58 காலை சென்னை ரப்பர் தொழிலாளர் சங்க நிதிக்காக திருவெற்றியூர் தங்கம் டாக்கீசில் நடைபெற்ற 'நாம்' திரைப்படக் காட்சி கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது.

★

பெரம்பூர்

4-10-58 காலை புளியந்தோப்பு தீவிபத்தில் குடிசை இழந்தோர் உதவி நிதிக்காக பெரம்பூர்-மகாலட்சுமி தியேட்டரில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் திருமதி சத்தியவாணிமுத்து தலைமையில் அறிஞர் அண்ணா, வழக்கறிஞர் வி. பி. இராமன், கண்ணதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

★

தியாகராயநகர்

7-10-58 இரவு வாணிமகாலில் 'நாம் கண்ட நல்லவள்' என்ற நாடகம், கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது.

★

தஞ்சை

11-10-58 தஞ்சை தென் ரயில்வே தோழமைக் கழக சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜி. பராங்குசம், கண்ணதாசன் கலந்துகொண்டனர்.

★

திருவெறும்பூர்

13-10-58 மாலை அன்பில் தர்மலிங்கம், சி. பி. சிற்றரசு, கண்ணதாசன் ஆகியோர் தி. மு. கழக சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.

★

திருச்சி

13-10-58 இரவு அண்ணா-அண்ணி படிப்பக சார்பில் ராபி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், எம். எஸ். மணி, அன்பில் தர்மலிங்கம், சி. பி. சிற்றரசு, கண்ணதாசன் கலந்துகொண்டனர்.

★

கண்ணதாசன் கலந்துகொள்ளும் கூட்டங்கள் :

25-10-'58. சென்னை
26-10-'58. மதுரை
31-10-'58. மதுரை தியாகராசர் கல்லூரி

— 2ம் பக்கம் தொடர்ச்சி —

களுக்கு அவர்கள் தருகின்ற பதில் சரியான ஆதார விளக்கத்துடன் அமையவில்லை. கேரள மக்களின் நலன்களை-உயிரிழக்கும் கட்டாயத்தை மத்திய சர்க்கார் நன்ருகக் கவனித்துக் கொண்டு வருகிறது'' என்றெல்லாம் விளக்கம் தந்தார்! கேரள முதலமைச்சர் சங்கரன்-கம்யூனிஸ்டுகள் வாஞ்சையுடன் ஜாதிப் பெயரிஞலே அழைக்கப்படும் ''நம்பூதிரிபாட்'' தன்னுடைய செங்கொடியை உயரப் பிடித்து இந்தியாவின் பிரதமருக்கு-நீண்டதோர் மறுப்புரையைப் பட்டியலாக்கித் தெரிவித்தார்!

''கேரள ராஜ்யத்திலுள்ள நிலைமையைப்பற்றித் தவருனதும், திரித்துக் கூறப்பட்டதுமான ஒரு காட்சியை பிரதம மந்திரியும் எதிர்க் கட்சிகளும் சித்தரித்துள்ளனர் என்று கமிட்டி கருதுகிறது. வாரண்டப்பள்ளி- சந்தனத் தோப்பு சம்பவங்கள் பொறுத்தமட்டில் போலீசார் துரிதமாக நடவடிக்கை எடுத்துள்ளனர். தனக்கு நன்ருகத் தெரிந்திருந்தும், பிரதம மந்திரி இந்த உண்மையை அலட்சியப் படுத்திவிட்டார் என்று தோன்றுகிறது'' மத்தியக் கமிட்டியின் இந்த வாசகத்தில் புதுமை எதுவுமில்லை. ஏனெனில் இதையேதான் முதன் மந்திரி சங்கரனும் குறிப்பிட்டிருந்தார். நேரு எந்த நிலையிலே காங்கிரஸ்காரர்களின் புகாருக்கு செவி சாய்த்தார் என்பதை சங்கரன் எடுத்துரைத்தார். அவருடைய விளக்கம்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானமாயிற்று. அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய முடிவுகளைக் கூறுமுன்பாக- கேரளத்துக் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய செயலாளர் கோவிந்த நாயர் வாயிலாக கேரள சர்க்காரின் எல்லாக் காரியங்களையும் வரவேற்றுப் பாராட்டிவிட்டது. பிர்லா ஒப்பந்தம் உள்ளிட்ட எதனையும் குறை கூற மறுத்துவிட்டது. மத்தியக் கமிட்டியின் தீர்மானம் கேரளக் கம்யூனிஸ்டுகளால் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதே தவிர மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்கு அங்கே வேலையில்லை. அவர்கள் புதுடில்லியிலிருந்தே தங்களுடைய ஒப்புதலைத் தந்திருக்கலாம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்ட வரலாற்றில் மாகாணக் கமிட்டியின் கட்டளைக்கு மத்தியக் கமிட்டி தலை வணங்கியது இதுதான் முதல் தடவையாகும். கேரளத்துச் செயலாளர் கோவிந்த நாயரை அகில இந்தியத்தின் செயலாளர் அஜய்குமார் கோஷ் அவர்கள் மறுத்தும் எதிர்த்தும் பேச முடியவில்லை! இதுமட்டுமல்ல மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்குள்ளே பொதுக் காரியதரிசி அஜய் கோசுக்கு எதிராக ஒருவர் சரியான போட்டி மேடையை வைத்தார்-அந்தத் தைரியம். தமிழ்நாட்டு ராமமூர்த்திக்கும் வெங்கட்டராமனுக்கும் நிச்சயம் வராது என்பதை நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள். தோழர் எஸ். ஏ. டாங்கே இந்தக் காரியத்தைச் செய்தார். பம்பாய் நகர சபைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது தொழிலாளர் துரோகியாக இருந்தார் என்பதை ரணதிவேயும் - புபேஸ்குப்தாவும் விசாரித்தார்கள்-அதற்குத் தீர்ப்புத் தண்டனையும் தருவதற்கு முன்பாகவே டாங்கே தன்னுடைய எண்ணத்திலபட்ட கருத்துக்களைத் துணிந்து கூறிவிட்டார்.

''கேரளத்தில் துப்பாக்கிப் பிரயோகங்களின் துணையின்றி எங்களால் ஆட்சி செய்ய முடியவில்லையென்ருல் கம்யூனிஸ்ட் மந்திரி சபையை ராஜிஞமாச் செய்யும்படி கட்டாயப்படுத்துவோம். கேரள சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகத்தை சந்தனத் தோப்பில் தவிர்த்திருக்க வேண்டும்- இது கட்சியின் தோல்விகளிலே ஒன்ருகும்'' என்பதாகத் தோழர் டாங்கே பம்பாயில் அறிவித்தார். மேலும் ''கேரளத்தில் ஒரு கலப்பு மந்திரி சபையை அமைக்க இடது சாரிக் கட்சிகளான பிரஜா சோசலிஸ்டுகளும் புரட்சி சோசலிஸ்டுகளும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைக்க வேண்டும். அதற்கான காரியங்களை நான் கவனிப்பேன்; முயற்சி செய்வேன்'' என்றும் டாங்கே அழைப்பு விடுத்தார்! நாஞ்சில் நாட்டுத் தமிழ்ப் பகுதியில் எட்டுத் தமிழர்களை சுட்டுத் தள்ளிஞர்கள் பட்டம் தானுவின் தலைமையிலேயிருந்த பிரஜா சோசலிஸ்டுகள்! அன்றைக்கு டாக்டர் ராம்மனேகர் லோகியா குறிப்பிட்ட குரலிலே தோழர் டாங்கே பேசினர் அஜய் கோசும்-ஏ. கே. கோபாலனும், ரணதிவேயும், ஜோஷியும், பசுவ புன்னையாவும்-தங்களைப்போன்ற செயலாளரான டாங்கேயின் கருத்துக்களைக் கேட்டுக் கலங்கியிருக்க வேண்டும்! கேரளத்து மந்திரி சபை தத்தளிப்பில் சிக்கித் தவிக்கிறது என்றஉண்மையைஉணர்ந்து பேசிய டாங்கேயின் அழைப்பை பிரஜா-சோசலிஸ்டுத் தலைவர் சிதரனும்-புரட்சி சோசலிஸ்டுத் தலைவர் கண்டன் நாயரும் எள்ளி நகையாடிஞர்கள். ''கம்யூனிஸ்டுகளின் மயக்க மொழிகளிலே நாங்கள் மயங்கமாட்டோம். உங்களுடைய கள்ளத்தனமான தந்திரச் செயல்கள் எங்களுக்குப் புரியும், இனியும் ஏமாறமாட்டோம்'' என்று மிக மிகக் கண்டிப்பாகவே மறு மொழி கொடுத்துவிட்டார்கள். டாங்கேயின் பரிதாபகரமான நிலைமையை இவர்கள் இரக்கப்படுவதற்குப் பதிலாக-மிகவும் மோசமாக்கிவிட்டார்கள் - நாமெல்லாம் எண்ணிஞேம் டாங்கே மீது கட்டாயம் நடவடிக்கை எடுப்பார்கள் அவரும் ஒரு லோகியாவாகிவிடுவார் என்று. ஆனல் திருவனந்தபுரத்தில் கூடிய மத்தியக் கமிட்டியில் அஜய்கோஷ் டாங்கேயின் கருத்துக்களை விவாதிக்கும் துணிவு பெறவில்லை. கட்சிக்கு மாறுபட்டவர்களைக் கண்டிக்கும் வகையில் அவருடைய முதுகெலும்பிலே பலமில்லை என்பதனை பின்புதான் உணர்ந்து கொண்டோம். டாங்கேயும் தன்னுடைய இலட்சியத்தைப் பம்பாய் தெரு ஓரத்திலேயே அனுதைக் குழந்தையாகத் தூக்கி யெறிந்திருக்க வேண்டும்!

கேரளத்துக் கம்யூனிஸ்டுகளும் மத்தியக் கமிட்டியினரும் தங்கள் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்களை இல்லையென்று மறுப்பதற்குப் பதிலாக நாங்கள் சந்தனத் தோப்பில் சுட்டோம். எங்களைக் கண்டிக்கும் நேருவும்- அவருடைய சகாக்களும்- தங்களுடைய ஆட்சி நடைபெறும் பகுதிகளிலே சுட்டுக்கொண்டு தானே இருக்கிருர்கள் என்ற முறையிலே மறுப்புரை தருகிருர்கள். இந்தப் பதில்-காங்கிரஸ்காரர்களுக்கும் பிரஜா சோசலிஸ்டுகளுக்கும் கூறப்படுவதாக ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனல் திராவிட முன்னேற்றக் கழகம் - ஏனைய பொதுமக்கள் போன்ற நடுநிலையாளர்களுக்குக் கம்யூனிஸ்டுகள் தருகின்ற விளக்கம் சரியானதல்ல! அமிர்தசரசில் சாத்வீகத் தீர்மானம் நிறைவேற்றிய கம்யூனிஸ்டுகள் சந்தனத் தோப்பில் பிணங்களின் மீது நடை போட்டார்கள் என்ற கொடுமையான உண்மையை முன்னேற்றக் கழகம் மறந்துவிடுமா? ''பி. சோ; பு. சோ; காங்கிரஸ்காரனுடன் சேர்ந்துகொண்டு தி. மு. க. காரனும் கேரளத்தில் அராஜகம் என்று பேசுகிருன்'' என்பதாக மிக மிக கண்ணியக் குறைவுடன் 'ஜனசக்தி'யில் குறிப்பிட்டிருந்தார் தோழர் ஜீவானந்தம்-இதற்கு முன்பாக மதுரையிலும் முதுகுளத்தூர் செய்தியைப்பற்றியும் இப்படித்தான் தரமிழந்த வார்த்தைகளைத் தன் தகுதிக்கு நெடுந் தொலைவிலேயிருந்து தேடிப் பிடித்துப் பேசினர்! கம்யூனிஸ்டுகளைப்பற்றி இன்னெரு கட்சியினர் சொல்லிய பிறகுதான் முன்னேற்றக் கழகம் முடிவெடுக்க வேண்டிய அவசியமில்லை. கேரளக் கிருத்துவர்களைக் குற்றம்சாட்டுகிற கம்யூனிஸ்டுகள்- தூத்துக்குடிச் செயலாளர் பிட்டரை மதம் விட்டு விலக்கியமைக்காக-வழக்குத் தொடரப் போகும் மதப் பித்தர்கள் கம்யூனிஸ்டுகள் - எந்த உண்மையையும் சேர்த்துக் கூற என்றும் தயங்கப் போவதில்லை! கேரளக கம்யூனிஸ்டுகளைத் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் பாராட்டித்தான் தீர வேண்டும் என்ற ரகசியக் கட்டளைகள்கூட தரப்பட்டிருக்கலாம். ஆனல் அது- கழகத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றும் கண்டன உரையைத் தடுக்கமுடியாதே! புதுடில்லியிலேயிருக்க வேண்டிய அஜய்கோசுக்களும்- ஜோஷிகளும்- திருவனந்தபுரத்தில் காத்துக்கொண்டிருக்கிருர்கள். கோவிந்த நாயரும்-சங்கரனும் சொல்லித் தருகின்ற செய்திகளைத் திரும்பத் தெரிவிக்கும் கிளிக் குஞ்சுகளாகவும்- கிராமபோன் இசைத் தட்டுகளாகவும் இருக்கிருர்கள்- கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய அடிப்படையில் மிகச் சாதாரணமானவர்களாக இருக்கும் ஜீவானந்தங்களும் ராமமூர்த்திகளும் தன்மான உணர்வுடன் எப்படிப் பேசமுடியும்?

ராஜாபார்ல் பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.

இந்தியப் பாராளு மன்றத்தில் கம்யூனிஸ்டுகள் மிக மிகக் கேவலப்பட்ட தன்மையிலே எடை போடப் படுகிருர்கள்-டாக்டர் கே. பி. மேனனும்- மசானியும்- டாங்கேயின் பேச்சுத் திரனையும்-வாதாடும் வல்லமையையும் உடைத்தெறிந்து காட்டுகிருர்கள். கேரளத்து முதலமைச்சர் உள்நாட்டு மந்திரிக்கு விண்ணப்பம் போடுகிருர் கேரளாவைப்பற்றி பாராளு மன்றத்தில் விவாதிக்க வேண்டாம் என்று! கம்யூனிஸ்டுகளின் எண்ணத்திலே தூசில்லை. செயலிலே மாசில்லையென்ருல் ஏன் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமையைப் பறிக்க வேண்டுமென்று ஜனநாயகத்தின் காவலர்கள் என்று பிரகடனப்படுத்தியிருக்கும் கம்யூனிஸ்டுகள் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிருர்கள். உண்மைகளை மறைக்கவில்லையென்ருல் கேரளத்தின் முன்னேற்றத்தை எடுத்துரைக்கும் உரிமை கம்யூனிஸ்டுகளுக்கும் உண்டு- அவர்களும் பேசலாம். தங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள இழிவுகளைத் துடைத்துக் கொள்ளவும் ஒரு வாய்ப்பாகஇருக்கும். பாராளுமன்றம்தான் இதற்கேற்ற இடமாகும்! இதனைக் கம்யூனிஸ்ட் முதலமைச்சர் எதிர்ப்பதும் ஏற்றுக்கொள்ள மறுப்பதும்தான் ஜனநாயக வாதிகளின், மக்களாட்சிப் பண்புகளை மனதிலே கொண்டிருப்பவர்களின், பரிபூரணமான நம்பிக்கைக்கு உரியவர்கள் என்ற உரிமையை இந்தியக் கம்யூனிஸ்டுகள் இழந்துவிடுகிருர்கள்! திராவிட முன்னேற்றக் கழகத்தவர் கேரளக் கம்யூனிஸ்டுகளின் செயல் முறைகளை வைத்துக் கணக்கிடுகிருர்களே தவிர-ஏனைய எதிர்க்கட்சியினரின் ஆதரவைப் பெறுவதற்காகச் செய்யப்படும் அரசியல் வியாபாரமல்ல! ''திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் கட்சியல்ல-ஒரு அராஜக கோஷ்டிதான்'' என்றும் புத்தகம் வெளியிட்ட 'ஜனசக்தி'யார்கள் தான்-''கேரளாவில் அராஜகமா?'' என்று புத்தகம் வெளியிட வேண்டிய கட்டாயத்திற்கு இணங்கியிருக்கிருர்கள்! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்காணிப்பிற்கும் அனுதாபத்திற்கும் உரியவர்கள்-தற்போதைக்கு புதுடில்லி-திருவனந்தபுரம்கம்யூனிஸ்டுகளைப் பார்த்துத் தங்கள் உடைகளையும், உரைகளையும், உரிமைகளையும் தயாரித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள், தங்களுக்கும் அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியிலும் அரசியல் நிகழ்ச்சிகளிலும் முக்கியப் பொறுப்பேற்கும் தகுதியுண்டு என்று நிருபிக்கும் வகையில் அக்டோபர் எட்டாம்தேதி முதல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேசியக் கௌன்சில் கூட்டத்தில் தங்களுடைய உருவங்களையும் உள்ளத்தையும்காட்டிக் கொண்டார்கள் என்ற நல்ல சேதியைத் தர வேண்டும்-கம்யூனிஸ்டுகளின் தேசியத் திருச்சபையின் சென்னைச் செய்திகளான முடிவுகளைப்பற்றி அடுத்த கிழமை விவாதிப்போம்.

—கூடலரசன்

ஜூபிடர்
அன்னைபத்தி
JUPITER PERFUMERS
CITY
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
★
எங்கும் கிடைக்கும்.

வெண்பாப் போட்டி

28. பத்தரையும் சித்தரையும் பார்.

நீதியிலார் யாரென்னில் நேருவைப்பார்; நீள்புவியில்
ஆதியினின் றேய்ப்பார்தாம் ஆரியர்பார்;—ஓதுபுகழ்
முத்தமிழர் வாழ்வழித்த மூடரென்பார் யாரென்னில்
பத்தரையும் சித்தரையும் பார்.

—இரா. அரங்கநாதன், நயனூர்மண்டபம்.

ஆடுந் திருத்தில்லை ஆண்டவனே உன்னடியார்
வாடுவதேன் மெத்த வறுமையினால்—நீடுலகில்
சொத்துச் சுகமிழந்துன் சன்னதியிற் கூடிநிற்கும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—கு. பரிமளம், கமுதி.

கல்லென்றார் செம்பென்றார் மண்மரம் என்கின்றார்
இல்லென்றார் ஈசனவன்; ஈரோட்டார்—சொல்லிட்டால்
நாத்திகன் என்றிடுவார் நன்றோ? நடுநின்று
பத்தரையும் சித்தரையும் பார்.

—ஜமேதார் டி. கே. ஆறுமுகம், புலியகுளம்.

பொய்மைக் கருத்தெல்லாம் போயொழிய ஆன்றோர்கள்
செய்தபணி எண்ணிடடா செந்தமிழா!—எய்கணைபோல்,
பித்துமன வாழ்வினிலே பெம்மானும் ஒன்றென்ற
பத்தரையும் சித்தரையும் பார்!

—நா. இளங்கீரன், திருவையாறு.

இத்தரையில் இல்லறந்தான் எந்நாளும் மானிடர்க்கு
தித்திக்கும் வாழ்வென்றே தேராமல்—எத்தினமும்
பித்தம் தலைக்கேறி பக்தியினால் பாழாகும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—வள்ளிமணாளன், காராமேடு.

சிவமென்றார்; சாகா திருக்கவழி சொன்னார்;
தவமென்றார்; எல்லாம் தவிடாய்ச்—சவமானார்!
இத்தரையில் ஈதெல்லாம் ஏமாற்றென் றேயுணரப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—ஒளியழகி, பழனி.

முத்தமிழே மூவுலகாம்! முத்தியெனல் அத்தமிழை
நத்திப் பெறுகின்ற நல்லின்பாம்!—சித்திரனே!
அத்தனை விண்ணென்ன அண்ணாந்தே ஏமாறும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—மு. முகம்மது அலி, காரைக்கால்.

பாராட்டும் செய்கைக்கு, பக்திக்கு, நேர்மைக்கு
வாரியாரை வீண்பேச்சுச் சாமியாரைப்—பாராதே!
நித்தமும் தம்வாழ்வில் மேற்கொண்ட முற்காலப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

எண்மணியும் ஒண்முத்தும் பொற்றட்டில் நன்கமைத்து
பெண்மகிழ நன்றாய் அணிசெய்வார்—பண்சமைக்க
முத்தமிழின் சொற்றேர்ந்து மூதுரையை நன்கமைத்த
பத்தரையும் சித்தரையும் பார்.

—கலி. பொன். பாலு, கடலூர் வண்ணரபாளையம்.

சுத்தியைக் கைப்பிடிப்பார்; சுத்தமும் செய்திடுவார்;
வித்தையில் தேர்ந்திருப்பார்; மெய்யினை—நித்தமும்
சித்தத்தே கொள்ளார்; நகைப்புத் தொழில்செய்யும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—ரவி, மதுரை.

வால்மீகி கம்பன் வடவர் துளசிதாஸ்
போலான பொய்யரைநீ பாராதே—நூல்தந்த
வள்ளுவன்தொல் காப்பியன் வானிளங்கோ போன்றதமிழ்ப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—பே. சா. தனராசு, நாமக்கல்.

போதி மரத்தண்ணல் போதித்த நீதிகளில்
ஏதும் உணர்ந்திலையே ஈழமே!—ஆதிபுகழ்ச்
சித்தார்த்தன் கண்டால் சிரித்திடுவான்; உன்னுடைய
பத்தரையும் சித்தரையும் பார்.

—அமரன், தேனி.

உத்தமர் போல்வாழ்வார்; ஊருக்கே தீயிடுவார்;
நித்தமும் கொள்ளை; கொலைபுரிவார்;—இத்தரையில்
புத்தரையும் காந்தியையும் பூசிக்கும் காங்கிரசுப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—இன்பவல்லி, சுந்தராபுரம்.

பிணங்கள் நாடிவரும் பேய்க்கழுகுக் கொப்பாய்ச்
சனங்கள் தமைக்கொல்லும் சாவுக்—குண'மாஸ்கோ'
எத்தரையும் பித்தரையும் ஏற்காதே நம்கழகப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—வள்ளி, நாமக்கல்.

சத்தியமோ ஒன்றுமிலார் சாமியென ஏய்ப்பாரை
பத்திசெயும் சித்தரெனப் பாராதே—நித்தமும்
இத்தரையில் மக்கள் இனிதிருக்கத் தொண்டாற்றும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—மு. அ. முருகேசன், சென்னை-21.

ஆண்டவனை அர்ச்சிக்க அற்ப வடமொழியைக்
கொண்டாடிக் கொள்ளும் அறிவிலிகாள்—பண்டெல்லாம்
முத்தமிழில் பாப்புனைந்தே மூத்தோனை வேண்டிட்ட
பத்தரையும் சித்தரையும் பார்.

—க. பொ. இளம்வழுதி, கலிதீர்த்தாள்குப்பம்.

பூதவுடல் பொய்யென்பர் சித்தரெலாம்; பத்தரோ
வேதமுதல் வோனைத் துதிக்கவென்பர்;—சூதறிவாய்
முத்தமிழா! கொள்கை முரண்பாட்டால் மாறுபட்ட
பத்தரையும் சித்தரையும் பார்.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

சாதியினைப் போற்றுவதும் சாத்திரங்கள் பார்ப்பதுவும்
சோதியினைத் தெய்வமென்றே சொல்லுவதும்—வேதியர்கள்
பொத்துவதும் காதுகளை பொய்யேயாம் இஃதுணர,
பத்தரையும் சித்தரையும் பார்.

—மோ. நா. கோபாலகிருட்டினன், மோளையாண்டிப்பட்டி.

முக்கொடிகள் ஒல்கா முரசெறிந்த நாளதனில்
திக்கெட்டும் பொன்கொடுத்தே தாழ்ந்திட்டார்—பக்தியொடு;
எத்தரெமை யாள்கின்றார் இன்றவர்க்குத் தாள்பணியும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—தில்லை. செயராமன், சின்னப்பேட்டை.

நட்டகல்லை நம்பனென நம்பாத நல்லவர்கள்
கெட்டதில்லை, மானிடனே! கேளப்பா;—கிட்டவந்து,
புத்தரையும், ஏசு,நபி, பட்டினத்தார், ராமலிங்கர்,
பத்தரையும் சித்தரையும் பார்.

—மா. சுப்பையா, நாரைக்கிணறு.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு